தென்றல்

ஆசிரியர்: கண்ணதாசன்

கே.எஸ்.ராமு

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை-6.

மலர் 6 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1991, சித்திரை 11 (23-4-'60). சனிக்கிழமை | இதழ் 45

கடிதம் கண்டோம்; கையெழுத்தில்லையே!

அன்புள்ள தோழரே!

வணக்கம்! பிறர் பேசும் தற்பெருமைகளைக் கேட்டுக்கொண்டேயிருக்கிற நானும், என்னைப் பற்றிக் கொஞ்சம் பேசலாமா என்று பார்க்கிறேன். என்னைப்பற்றி என்னிடமே பேசுகிற நண்பர்கள் எனக்கில்லாததால், நானே கொஞ்சநேரம் பேசிக்கொள்வது வேடிக்கையாக இருக்குமல்லவா?

இந்த இரண்டு மூன்று மாதங்களில் தொடர்ச்சியாக எண்பது கூட்டங்களில் நான் பேசினேன். இயக்கப் பேச்சாளர்களின் வரலாற்றில் இது ஆச்சரியமில்லை என்றாலும் என்னைப் பொறுத்தவரை இது ஆச்சரியமானதுதான். இயக்கத்திலேயே அதிகமான அளவுக்குக் கூட்டங்கள் பேசியவர்கள் என்றெடுத்துக்கொண்டால், அருமைத் தாத்தா சி. பி. சிற்றரசு அவர்கள் அவர்களுள் முதலிடம் வகிப்பார்கள். அந்த எல்லையைக் கருதிப் பார்க்கும்போது நான் பேசிய கூட்டங்களின் அளவு மிகச் சாதாரணமானதுதான். இருப்பினும் கழகத்தில் அண்மையில் எழுந்த உணர்ச்சிகரமான சூழ்நிலையில், இந்தக் கூட்டங்கள் எனக்குப் பெரு மகிழ்ச்சியை ஏற்படுத்தின, சென்னையிலே மட்டும் நாற்பது கூட்டங்களுக்குமேல் பேசினேன். அடுத்தடுத்த தெருக்களிலேகூட மாற்றி மாற்றிக் கூட்டங்கள் போட்டார்கள். இருந்தும் ஒவ்வொரு கூட்டத்திலும் கூடிய மக்கள் தொகையை எண்ணிப் பார்க்கும்போது எனக்கே வியப்பும் திகைப்பும் ஏற்படுகின்றன. நாடெங்கிலேயும் மக்களின் ஆர்வம் கரை புரண்டோடுகிறது. சுறுசுறுப்பான ஒரு வேலைத்திட்டத்தை இயக்கத்தினிடம் அவர்கள் எதிர்பார்க்கிறார்கள் என்பதைக் காணமுடிகிறது.

ஒரு வாரத்திற்குமுன் மதுரை நகரிலே பேசினேன். ஏறக்குறைய ஓர் இலட்சம் மக்களுக்குமேல் இருக்கும். அப்பப்பா! கூட்டமா அது! சித்திரைத் திருவிழாவுக்குக் கிராமத்து மக்கள் அனைவரும் மதுரையில் வந்து கூடுவதுபோல், அந்தக் கூட்டத்தில் கூடியிருந்தனர். மழை பெய்துகொண்டே இருந்தது! யார் அதைப் பொருட்படுத்தினார்கள்? சேற்றிலேயே அமர்ந்திருந்தார்கள்; இறுதிவரை கவனித்துக் கேட்டார்கள். உதாரணத்திற்கு ஒன்று சொன்னேன். தொடர்ச்சியாக எல்லாக் கூட்டங்களிலுமே இதே நிலைதான். இறுதி வெற்றி நமக்குத்தான் என்பதில் எனக்கு எள்ளளவும் ஐயம் இல்லை!

எதிரிகள் நினைத்ததுபோல் கழகம் பிளவுபடவுமில்லை; ஓர் அணுவாவது கழகத்திலிருந்து சிதறுகிற நிலையும் இல்லை. பாவம்! அவர்கள் நமது அருமை நண்பர் சம்பத் அவர்களின் கடிதத்தை வைத்துக்கொண்டு, எவ்வளவோ கோட்டைகளைக் கட்டிக்கொண்டிருந்தார்கள். அரசியல் சூதாட்டத்தில் அடிக்கடி இறங்கி இறங்கி. ஒவ்வொரு தடவையும் மூக்குடைப்படுகிறவர்கள், இந்தக் கடிதத்தை வைத்துக்கொண்டும் விளையாடிப் பார்த்தார்கள். அரசியலிலே திட்டவட்டமான கணக்கும், தெளிவான போக்கும் உடையவர் சம்பத் என்பதைத் தாங்கள் அறிவீர்கள். குட்டையைக் குழப்பி மீன் பிடிக்கும் பழக்கும் அவருக்கு என்றுமே இருந்ததில்லை. இயக்கத்திலேயே இருபத்திநான்கு மணி நேரத்தையும் அரசியலுக்கு ஒதுக்கியவர்களில் முக்கியமானவர் சம்பத். இதில் அவர் பெருமைப்படாவிட்டாலும் நாம் பெருமைப்பட நியாயமுண்டு. இன்றைய நிலையில் சம்பத்தைக் கொண்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கணக்கிடும் டில்லி வட்டாரம் வியப்பில் ஆழ்ந்திருக்கிறது. வரையறுத்த பேச்சும், பல்வேறு உறுப்பினர்களுடன் அவர் உறவுகொள்ளும் முறையும், வடநாட்டில் கழகத்திற்குப் பெரும் இடத்தைத் தேடித் தந்துள்ளன. அப்படிப்பட்ட ஒருவர் முற்றிலும் நல்லெண்ணத்தோடு, இயக்கத்தின் வளர்ச்சிக்காகத் தெரிவித்த கருத்துக்களை வைத்துக்கொண்டு, குழப்பவாதிகள் விளையாடிப் பார்த்தார்கள், அண்மையில் சென்னை-பெத்துநாயக்கன்பேட்டையில் நடந்த கூட்டத்தில், தோழர் சம்பத் அவர்கள் இவர்களுக்குச் சூடான அடி கொடுத்தார்.

''திருமண வீடு பரபரப்பாகத்தான் இருக்கும். கருமாதி வீடுகள்தான் அமைதியாய் இருக்கும்!'' என்று அவர் சொன்னதை மக்கள் உற்சாகமாக வரவேற்றுக் கை தட்டினர். சம்பத்தின் பேச்சென்றால் உங்களுக்குத் தெரியும். சொல்லவருகிற கருத்துக்கு அடிப்படை அமைத்துக்கொண்டு கட்டடம் கட்டுகிற முறை, அவருக்கே உரியது. ஒரு கூட்டத்தில் இயக்கத்திற்கும் அவருக்கும் உள்ள தொடர்பை அவர் உருக்கமாக விளக்கியபோது, கூட்டம் முழுவதுமே கண்ணீர் சிந்தியது.

தத்துவங்களுக்காக உயிர் வாழ்கிற இலட்சிய வாதிகளில், சம்பத் அவர்களுக்குத் தனியிடம் உண்டு. அண்ணா அவர்களுக்கும் சம்பத் அவர்களுக்கும் உள்ள நட்புறவைக் கெடுக்க, சம்பத்தின் ''சித்தப்பா''வாலேயே முடியவில்லை என்றால், வேறு எந்த ''பெத்தப்பா''க்களால் முடியப்போகிறது?

தோழரே! இரண்டு கூட்டங்களின் மூலம் காங்கிரசுக்காரர்களின் தில்லுமுல்லுக் கரங்களை சம்பத் முறித்துவிட்டார். காங்கிரசு நாளிதழ்களுக்குக் குழப்பம் செய்ய ஒரு கருத்தும் கிடைக்காதபடி அடித்துவிட்டார். ஆனால் நம்மிலே சிலர் ஏன் அதைத் திரும்பத் திரும்பக் கிளப்பிக்கொண்டிருக்கவேண்டும் என்றுதான் எனக்குப் புரியவில்லை. ஒரு கூட்டத்தில் சம்பத் அவர்கள்

— 12-ம் பக்கம் —

அடங்கிய நிலையை நாமே கிளப்புவதா?

கேரளத்து என். ஜி. ஓ.க்கள் சென்னை என். ஜி. ஓ.க்களுக்கு எதிரிகள்!

— முன் இதழ்த் தொடர்ச்சி —

திருவனந்தபுரத்தின் இதயப் பகுதியான இடம் பட்டம் தாணுவின் பெயராலே 'பட்டம்' என்று அழைக்கப்படுகின்றது. இங்தோன் கேரள மாநிலத்தின் சட்டமன்றமும் சர்க்கார் அலுவலகங்களும் அமைந்துள்ளன. எந்த நேரத்திலும் கூட்டம் மிகுந்த தெருவாக இருக்கும். சட்டமன்ற மாளிகையும் அதன் முன்னே அழகுப் பூங்காவின் செம்மைப்படுத்தப்பட்டுள்ள அமைப்புகளும் அதற்குத் துணையாக இருக்கின்றன. சவுக்குச் செடிகள் யானைமீது சிறுவன் அமர்ந்திருப்பதுபோலவும், மயில் நடனமாடுவதுபோலவும் பல உருவங்களில் உள்ளன. சட்டமன்றம் நடைபெறாத நேரமாக இருந்தாலும் கும்பலுக்குக் குறைவில்லை. காலியாகக் கிடந்த சட்டமன்றத்தைச் சுற்றிப் பார்த்தேன். உள்ளே நுழைவதற்குத் தொல்லையெதுவும் இல்லை. சென்னை சட்டமன்றத்தினுள் நுழைய எவராவது ஒரு உறுப்பினரின் துணையிருந்தால்தான் பார்வையாளர் பகுதியில் இடம்பெற முடிகிறது. ஆனால் கேரளச் சட்டமன்றம் எவருக்கும் சுலபமாக இடம் தருகிறது. நான் சென்ற நேரத்தில் மன்றம் கூடியிருக்கவில்லை. இருக்கைகள் எல்லாம் காலியாகவே இருந்தன. ஒலிபெருக்கிகள் அமைதி காத்து நின்றன. என் சிந்தனை, சட்டமன்றம் கூடியிருந்த நாட்களில் அங்கே நடைபெற்றவைகளையும் தினஇதழ்களிலே இடம்பெற்று இதயத்தைக் கவர்ந்த செய்திகளையும் நினைவிற்குக் கொணர்ந்தது. அங்கேதான் கலவரத் தலைவர்கள் அமைச்சர்களாகியுள்ளனர். அதே அமைச்சர்களின் வரிசையிலேயிருந்த சங்கரனைப் போன்றவர்கள் முன்னாள் மந்திரிகளாகியிருந்தனர். கம்யூனிஸ்ட் ஆட்சியை இருபத்தெட்டுத் திங்கள் காலம் தாங்கியிருந்த அந்தச் சட்டமன்றம் பட்டம் தாணுவையும் தாங்கிக் கொள்ளும் பொறுமையையும் பெருமையையும் பெற்றுள்ளது. சட்டமன்ற மாளிகைதான் அரசியல் சிக்கல்களுக்கு உறைவிடமாக இருந்தது. அங்கே நிகழ்ந்தேறிய சட்டங்களின் எதிரொலிதான் கேரளத்திலே கலவரப்புயலைத் தோற்றுவித்தது. விடுதலைக் கிளர்ச்சியென்ற பெயராலே நடைபெற்ற பலவகை விபரீத நிகழ்ச்சிகளின் முடிவுக்கும் சட்டமன்றத்து உறுப்பினர்களின் இடமாற்றம் உதவியாகிவிட்டது. எவரையும் எந்தக் காலத்திலும் எந்தக் கட்சியின் பெயராலே இருந்தாலும் ஏற்றுக்கொள்கின்ற அந்த அழகுத் திருமன்றத்தை எண்ணியெண்ணி வியந்துகொண்டே விடைபெற்றேன்.

திருவனந்தபுரத்தின் சர்க்கார் அலுவலகங்கள் அனைத்தும் சட்டமன்றத்தைச் சூழ்ந்தே இருக்கின்றன. நிலவருவாய்த்துறை, தலைமைக் கணக்காளர், பொறியியல்துறை வல்லுனர்கள் இப்படி எல்லாமே ஒரு பெருவீதியைப்போல் காட்சி தருகின்றன. சர்க்காருக்குச் சொந்தமான விசைவண்டிகள் அனைத்திலும் "கேரளா ஸ்டேட்" என்று ஆங்கிலத்திலே அழகாகப் பொறிக்கப்பட்டுள்ளது. அடிக்கடி மந்திரிகளின் தேசியக் கொடி பறக்கும் விசைவண்டிகள் வேகமாகத் தோன்றி மறைந்தன. புதிய மந்திரிகள் மிகவும் சுறுசுறுப்பாகச் சுற்றிக்கொண்டுள்ளனர் என்பதைச் சர்க்கார் ஊழியர்கள் சிலர் தெரிவித்தனர். சென்னை சர்க்கார் ஊழியர்களுக்கும் கேரள சர்க்கார் ஊழியர்களுக்கும் வேலைத்தன்மையிலும் ஊதியத்தொகையிலும் பெரிய வேறுபாடு இருப்பதை அறிந்து மகிழ்ந்தேன். வியந்தேன்! சென்னை சர்க்காரின் எந்தத் துறையிலும் ஒரு நபர் செய்யக்கூடிய வேலையை திருவனந்தபுரத்தில் நான்கு பேர் செய்கின்றனர். இரண்டு ஆண்கள் என்றால் எட்டுப் பெண்கள் பணிபுரிகின்றனர். காலை 10 மணிக்குத் துவக்கும் வேலையை ஒரு மணிக்கு முடிக்கிறார்களாம். அலுவலகத்திற்கு அருகேயுள்ள பூங்காக்களில் அமர்ந்திருந்துவிட்டு அவரவர் விருப்பம்போல் இடத்துக்கு வருவார்களாம். சரியாக ஐந்து மணிக்கெல்லாம் மூடிவிட்டு வெளியேறி விடுவார்களாம்! மராமத்து இலாகாவில் பணியாற்றும் நண்பர் ஒருவர் விரிவாகச் சொன்னார் அலுவலகச் செய்திகளையெல்லாம். கல்வித்தரம் அதிகமான சதவிகிதத்தில் உயர்ந்துவிட்டதால் வேலையின்மையை ஒழிப்பதற்காகவே ஒன்றுக்கு நான்காகப் புதிய புதிய நியமனங்கள் தந்துள்ளனர். சென்னை சர்க்கார் ஊழியர்களின் நிலை மிகவும் பரிதாபகரமானது. கேரளச்செய்திக்கு முரண்பட்ட வகையில் இங்கே சில அலுவலகங்களில் நான்கு பேர் கவனிக்க வேண்டிய வேலையை ஒருவரிடமே ஒப்படைத்துத் தொல்லை தருவது தவிர்க்க முடியாத அவலநிலையாக உள்ளது. காலை 11 மணி முதல் 5 மணி முடிய அலுவல் நடைபெறுவதுதான் சரியென்றாலும் எந்த சர்க்கார் ஊழியரும் அதன்படி இருக்கமுடிவதில்லை. இன்னும் சில அலுவலகங்களில் அற்புதமான அதிகாரிகள் இருக்கிறார்களாம். அவர்களுக்கு மாலை 4 மணிக்குத்தான் அலுவலகத்திற்கு வர இயலுமாம். இரவு 10 மணிவரைகூட வேண்டிய வசதிகளுடன் அலுவலகத்தில் இருப்பார்களாம். அங்கே அலுவல் செய்யும் என். ஜி. ஓ. நண்பர்களும் அதுவரையிலும் காத்திருக்க வேண்டுமாம்! பொய்க்குற்றங்களைச் சாட்டித் தண்டனைகள் தருவதுகூட இந்தப் போக்குகளை எதிர்க்கும்போதுதான் கிடைக்கின்றனவாம்! கேரளச் செய்தியைக் கேட்ட நம்முடைய என். ஜி. ஓ. நண்பர் ஒருவர் இவைகளைச் சொன்னார்.

திருவனந்தபுரத்து சர்க்கார் ஊழியர்களில் இருவகையானவர்களைக் கண்டேன். ஒருவகையினர் கம்யூனிஸ்ட் சர்க்காரின் செயல்முறைகளைச் சரியானவை என்றனர். வேறு வகையினர், அவர்களின் வெறுப்பினைக் கடுமையான வார்த்தைகளினாலே வெளியிட்டார்கள். பட்டம்தாணு சர்க்காரால் எடுக்கப்படும் தடுப்பு நடவடிக்கைகள் மிகச் சரியானவையென்றும், கம்யூனிஸ்ட்களின் ஒற்றர்கள் நிறைய இருக்கிறார்கள்; அவர்களையெல்லாம் வெளியேற்றுவதற்காகவே புதிய சர்க்கார் புதுப்புதுக் களையெடுப்புச் சட்டங்களை உருவாக்கியிருப்பதாகச் சொல்லிமகிழ்ந்துகொண்டார்கள். திருவனந்தபுர மாவட்டம் ஒரு கலெக்டரின் ஆட்சியில் உள்ளது. அங்கிருந்து நாற்பது கல் தொலைவில் எர்ணுகுளம் ஒரு கலெக்டர் ஆளுகையில் கவனிக்கப்படுகிறது. மேலும் நாற்பது கல் நகர்ந்தால் ஆலப்புழையில் ஒரு கலெக்டர்! இன்னொரு நாற்பது கல் தொலைவில் திருச்சூர் – பாலக்காடு மாவட்டங்களின் இரண்டு கலெக்டர்கள் உள்ளனர்! தமிழ்நாட்டின் பெரிய மாவட்டங்கள் ஒரே கலெக்டரின் மேற்பார்வையில் இருக்கும்போது கேரளத்தில் மட்டும் அதே அளவுள்ள கேரளத்தின் மாவட்டங்களுக்கு நான்கு கலெக்டர்கள் உள்ளனர்! இங்கே வட்டார ஆட்சித்தலைவர்களைப்போல் அங்கே மாவட்ட ஆட்சித்தலைவர்களின் எண்ணிக்கை அதிகம்! சர்க்கார் மாளிகைகளைத் தாண்டி கேரளத்தின் சிறப்புக்குரிய மிருகக் கண்காட்சி சாலையை அடைந்தேன். இயற்கையோடு இணைந்த காட்டிற்கும் வீட்டிற்கும் வேறுபாடு காணமுடியாத அமைப்பில் மிகப் பெரிய காட்சி சாலையாக உருவாக்கப்பட்டுள்ளது. குரங்கு வகைகள் வெளிநாட்டுக்குரியவைகள் பல உள்ளன. மனித இனத்தின் முற்றுப்பெறாத வளர்ச்சியுடன் நாம் செய்கின்ற பலவகையான அங்க அசைவுகளையும் செய்யக்கூடிய குரங்குகள் மறக்கக்கூடியன அல்ல. புகை பிடிக்கும் காட்சியும் வித்தைகள் செய்துமுடிக்கும் மாட்சியும் மனதைக் கவர்ந்தன. வெண்மயிலும் பல வண்ணத்தோகை கொண்ட அழகு மயிலும் நெஞ்சில் நிறைந்தன! வாழ்க்கைக்கோர் துணைவனை எதிர்நோக்கும் ஏந்திழையைப்போல் ஏக்கத்துடன் ஏறிட்டுப் பார்த்து நடந்தது வெண்மயில்! தன் இதயங்கவர்ந்தவனை, தன்னிடத்திலே இதயத்தைப் பறிகொடுத்தவனை, தனது வாழ்க்கைத் துணைவனாக்கிக் கொண்ட வசீகர வனிதையைப்போல் வண்ணத்தோகையின் மலர் விரித்து மகிழ்ச்சிப் பெருக்கால் நடனமாடிற்றுப் பிறிதோர் அழகுமயில்! உலக நாடுகளிலிருந்து கொணரப்பட்டுள்ள நாரைகளும் கொக்குகளும் மாடப்புருக்களும் மாங்குயில் கூவிடும் அந்தப்பூஞ்சோலையின்பஞ்சவர்ணக்கிளிகளுடன் கைகோர்த்து வாழ முடியாவிட்டாலும் கம்பிகளுக்குள்ளே சிறைப்பட்டு நின்றன. விடுதலை வேட்கை அவைகளின் விழியசைவிலே தென்பட்டது.

திருவனந்தபுரத்தின் பெருமையை உயர்த்திக்காட்டுவது மிருகக் கண்காட்சிதான் எனில், அது உண்மையேயாகும்! உல்லாசப் பயணக்காரர்களின் கும்பல் எப்போதும் நிறைய உண்டு! பறவைகளில் கொடூரமிக்க கழுகுகளும்ஆந்தைகளும் இருந்தன. கொடிய வனவிலங்குகளும் நிரம்பியிருந்தன. நான் கண்ட பயங்கர உருவமாக நீர்க்குதிரைகள் நின்றன! காண்டாமிருகத்தைக் கண்டபோதுகூட நெகிழாத உள்ளம், அந்த நீர்க்குதிரையின் கோரப்பற்களைக் கண்டபோது மிகவும் அருவருப்புக் கொண்டது! மாட்டு வகைகளும் மான் கூட்டங்களும் காடுகளில அலைவதுபோலவே அலைந்து திரிந்தன. வெப்பம் தாங்க இயலாமல் பதுங்கியிருந்தன. பழுப்புநிறங் கொண்ட பெரிய யானையொன்று வெளிவாயிலைக் காட்டி விடைகூறி அனுப்பியது. இரண்டணாக் கட்டணத்தைக் கொடுத்துவிட்டு பூங்கா முழுமையும் சுற்றிக் காண்பதற்கு மூன்று மணி நேரம் நிச்சயமாகத் தேவை! பிறகு பொருட்காட்சி சாலைக்குள் நுழைந்தேன். நுழைவாயிலில் 1900-ம் ஆண்டில் ராசக்காள் மங்கலம் என்ற ஊரில் பிடிக்கப்பட்ட திமிங்கலத்தின் இரு ஓர அலகுகளும் வரவேற்பு வளைவினைப்போல் இருபது அடி நீளத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. உள்ளே நுழைந்தவுடன் யானை, குதிரை, ஆடு மாடுகளின் எலும்புக் கூடுகள் வரிசையாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. 1902-ல் கொச்சி மன்னரால் கண்காட்சிக்குப் பரிசளிக்கப்பட்ட முதலை ஒன்று மிகப் பெரிய பயங்கரமான உருவத்துடன் வைக்கப்பட்டுள்ளது. எட்டு அடி நீளமுள்ள இரண்டு யானைத் தந்தங்களும் மினு மினுப்புக் குறையாமல் அலங்கரித்து வருகின்றன, அந்த அழகுக் கண்காட்சியை! பலவகையான பறவைகளும் மிருகங்களும் பாம்புக் குவியலும் பண்படுத்தப்பட்டுப் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன! துண்டும் முண்டும் (வேட்டி) கட்டிய நாயர் பெண்ணின் உருவச்சிலையும் உள்ளது. தமிழ்நாட்டுப் பெண்டிரைப்போல் ஆடை அணிகள் பூண்ட ஒரு பெண் சிலையில் 'தேவதாசி' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பூர்வீகக் குடிகளின் ஆண் பெண் உருவச்சிலைகளும் வைக்கப்பட்டுள்ளன. 'தண்டப் புலையா' என்ற உருவத்தின்கீழ் "ஒரு பூர்வீக திராவிடன்" (An Ancient Dravidian) என்று செதுக்கப்பட்டுள்ளது. திராவிடமும் திராவிட

கூடலரசன்

இனமும் இல்லையென்று கூறும் இழிகுணத்தோர்க்கு இந்தச் செய்திகள் தெளிவைத் தரக்கூடும். திராவிடத்தை மறந்தோர்க்கும் மறைத்துவிட முயல்வோருக்கும் இவை போன்ற பண்டைக்காலச் சின்னங்களாவது பாடம் புகட்டக்கூடும்! திருட்டுக் குணங்கொண்டோரின் தீய உள்ளங்கள் திருந்துவதற்கு நல்வழி பிறக்கும்!

திருவனந்தபுரம் பொருட்காட்சியில் கேரள மக்களின் வாழ்க்கைப் பண்புகளுக்குச் சான்றாக வைதீக நாயர் குடும்பத்தின் பனையோலைக் குடிசையும் அன்றாட நிகழ்ச்சிகளின் தொகுப்பும் சிறு சிறு சிலைகளின் வாயிலாக விளக்கப்பட்டுள்ளன. நாயர் குலச் சீமான் தேவதாசி இல்லத்தில் நடனங் கண்டு களிக்கும் காட்சி காணத்தக்கதாகும்! பொருட்காட்சியின் ஒரு தனி மண்டபத்தில் மாஸ்கோ நகரத்து ரோயரிச் என்ற ஓவியரின் வண்ணப்படங்கள் வைக்கப்பட்டுள்ளன. ஏசுநாதர்போன்ற "தேவகுமாரன்" திருலீலைகளெல்லாம் மிகவும் தெள்ளிய நுண்ணிய வண்ணக்குழம்பினால் வரையப்பட்டுப் பல ஆண்டுகளுக்குப் பிறகும் அழகு குலையாமல் இருக்கின்றன. சீனநாட்டுப் பளிங்குக்கல் பாத்திரங்களும் வெளிநாட்டுப் பெருமக்களின் உருவ அமைப்புகளும் கண்ணாடி அறைகளில் தென்படுகின்றன. பலவகையான கல்வெட்டுக்களையும் காரணப்பொருட்களையும் பார்த்துத் தெரிந்துகொண்டு மாளிகையையும் பூங்காவையும் சுற்றிலும் கவனித்துக் கொண்டே குறிப்பெடுத்துக்கொண்டிருந்த ஒரு வெளிநாட்டு நண்பரை அணுகிப் பேசினேன். லண்டன் 'டெய்லி ஒர்க்கர்' என்ற கம்யூனிஸ்ட் இதழின் செய்தியாளராக அவர்

— 3-ம் பக்கம் —

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 6 || 23-4-'60 || இதழ் 45

"ஐயோ! ஆச்சாரியார்!" -நேருவின் புலம்பல்!

"நீங்கள் சுதந்தராக் கட்சியைக் கூர்ந்து கவனிக்கிறீர்களா?"

16-3-60 அன்று, நேரு கூட்டிய செய்தியாளர் மாநாட்டில் ஒரு செய்தியாளர் தொடுத்தார் இந்தக் கணையை. அறிவின் சிகரம் நேரு பெருமான் "டன்டன் ஞய்" சீனுவுக்குப் பதில் எழுதியவராயிற்றே! அமெரிக்க நிருபர்களையே "மூஞ்சி"யில் அறைந்தவராயிற்றே! அவரா கலங்கப் போகிறார்? மின்வெட்டு வேகத்தில் அந்த இளவெட்டுச் சீமான் பதில் சொன்னார். அந்தக் காசுமீரத்துப் பண்டிதர் கொட்டிய இரும்பு மொழிகளைக் கேளுங்கள்!

"இல்லவே இல்லை! தம் செயலிலும் சிந்தனையிலும் அதிகமாகவோ குறைவாகவோ, தவறான வழிகளிற் செல்லும் எல்லா மனிதர்களையும் வெளியே இழுத்து வருகிறது. அதன்மூலம் சுதந்தராக் கட்சி, பயனுள்ள ஒரு நல்ல காரியத்தைத்தானே செய்து வருகிறது!"

ஆகா! இதுவன்றோ இந்த நூற்றாண்டின் தலை சிறந்த கிண்டல்! சரித்திரத்தில் இடம் பெறப் போகும் புதிய சார்லி சாப்ளினே! கலைவாணரின் பின்னே தோன்றிவிட்ட புதிய கலைவாணரே! "சேசசுப்பையராக இங்கே பிறந்து, இங்கிலாந்தில் குடியேறி, சேக்சுபியராகிவிட்ட" நாடக ஆசிரியன் படைத்த பால்ஸ்டாப்பின் இந்தியப் பதிப்பே! இத்தனை நாள் எங்கே போயிருந்தீர்? நவரசச் சீமானான நீர் இந்த நகைச் சுவையை இத்தனை நாளும் எங்கே விட்டுவிட்டு வந்தீர்?

ஆனால், பண்டிதரே! ஒரே ஒரு வினா! சுதந்தரா கட்சியில் உறுப்பினர்களாகவிருக்கும் திருவாளர்கள் இராசகோபாலாச்சாரியார், முன்சி, வி.பி. மேனோன், என். சி. அரங்கா முதலியோரெல்லாம் யார் யாரோ? ஆச்சாரியார் உமது அரசின் கடைசி கவர்னர்-செனரல்! உமது சென்னையில் '52-ம் ஆண்டுத் தேர்தலில் காங்கிரசார் போதிய பலம் பெறாதிருந்தனர். அப்போது காங்கிரசாரின் அமைச்சரவை அமைக்கவும் காங்கிரசார் அச்சமின்றி ஆளவும், ஆச்சாரியாரின் உதவிதானே கோரப்பட்டது! அவரே, காங்கிரசு சிக்கல்களைச் சந்தித்தபோதெல்லாம் உடனிருந்து உதவியவர். முன்சியும் மேனோனும் இரண்டு மாநிலங்களில் கவர்னராய் இருந்தோர். நேருவின் கையிலுள்ள தில்லிக்கு இரு மாநிலங்களை அடிமைகளாக்கிக் கொண்டிருந்தோர். திரு. அரங்கா இரு ஆண்டுகளுக்கு முன்னர்வரை காங்கிரசின் பொதுச்செயலாளராய் இருந்தவர். இவர்கள்தான் சுதந்தராக் கட்சியின் முன்னோடிகள். இவர்கள் செயலிலும் சிந்தனையிலும் 'அதிகமாகவோ குறைவாகவோ தவறியவர்க'ளாயிருந்தால், "இந்த நாகரிக காலத்தின் போக்குக்கு முற்றிலும் புறம்பானவர்கள்" எனின், அவர்களை அந்த உயரிய பதவிகளில் வைத்திருந்ததற்கு யார் பொறுப்பு! பண்டிதரே பொறுப்பாளியாகிறாரா? அவர்கள் எப்போது காலத்திற்குப் புறம்பானவர்கள் ஆனார்கள்? பண்டிதரோடு மாறுபடத் தொடங்கிய நாள் முதலா? அல்லது அதற்கு முன்பிருந்தேயா?

பண்டிதருக்கு முன்போ பொற்காலம். இப்போதோ அந்தப் பொற்காலம், நற்காலம் எல்லாம் போய்க் கேடு காலம் வந்திருக்கிறது. தள்ளாடுகிறார்; பாவம், தடுமாறுகிறார்! அத்தோடு எதிர்ப்பட்டவர் மீதெல்லாம் பாய்கிறார்.

சுதந்தரா கட்சி காங்கிரசின் அடிமடியிலேயே கை வைத்துவிட்டது. அது நடத்தியிருக்கும் இரட்டைத் தாக்குதல் காங்கிரசின் அடிப்படையையே ஆட்டம் காண வைத்திருக்கிறது. சுதந்தராக் கட்சியால் கைப்பற்றப்பட்டுள்ள இரண்டு உயிர்த்தளங்களுள் ஒன்று பணப்பெட்டி; மற்றது வாக்குப்பெட்டி!

"பிரீபோரம் எண்டர்பிரைசு" என்ற நிறுவனம் $2\frac{3}{4}$ இலட்சம் உறுப்பினர்களைக் கொண்டது. அவ்வுறுப்பினர்களின் சந்தாத்தொகை எல்லாம் சுதந்தரா கட்சியின் நலனுக்கே செலவழிக்கப்படும் என்று அறிகிறோம். காங்கிரசார் அவர்களை விரும்பி அலைந்தாலும், சுதந்தரா கட்சியினரே வெற்றிபெற்றிருக்கின்றனர். இப்போதே அந்த நிறுவனம் காங்கிரசுக்கு இதழையும், சுதந்தரா கட்சிக்கு இரும்புப்பெட்டியையும் திறந்துவிடுகிறது!

இரும்புப்பெட்டி அருகில் வந்துவிட்டால், வாக்குப்பெட்டி தானே வந்துவிடுமே! இனி ஏன் ஐயம்? அதனால்தான் காங்கிரசுத் தலைவருக்கு மிக அச்சம்! எங்கே தம் ஆசைக்கரு சிதைந்துவிடுமோ என்று அலறுகின்றனர்! நாம் செய்யக் கூடியது, டாக்டர் இலட்சுமணசாமி அவர்கள் வீட்டுக்கு வழிகாட்டுவதைத் தவிர வேறில்லை.

இதுவரை அகில இந்திய ரீதியில் காங்கிரசை எதிர்க்கச் சரியான கட்சி இல்லாதிருந்தது. இருந்த திட்டமிட்ட கட்சியான பொதுவுடைமைக் கட்சியும் போதிய அளவு வசதிபெற்றிருக்கவில்லை. ஆனால் சுதந்தராகட்சி வந்ததும் அந்த எண்ணம் தவிடுபொடியாகிவிட்டது. காங்கிரசின் மூலபலம் எதுவென அறிந்து அதனையும் தன் பக்கம் இழுத்துக்கொண்டது, சுதந்தரா கட்சி. மூலபலம் பறிபோன ஏமாற்றத்தில் மூளைபலமும் பறிபோனவராய்த் துடிக்கின்றார் நேரு.

காங்கிரசின் சார்பாக நிறுத்தப்படும் "விளக்குத்தூண் எம். எல். ஏ.க்களை" எந்தெந்த வகையில் முறியடிப்பதென்று அவர்களுக்கு நன்கு தெரியும். தேர்தல் வெற்றியின் இரகசியம் அவர்களுக்கும் தெரிந்திருப்பதால்தான் பண்டிதர் மருள்கிறார்; மயங்குகிறார்!

இவற்றை எல்லாம் நான் சொல்லவில்லை. "Vigil" என்ற ஏடு இத்தனையும் எழுதியுள்ளது. அந்த ஏட்டின் ஆசிரியர்கள் கிருபளானி, செயப்பிரகாச நாரயணன், மனோரஞ்சன் குகா ஆகிய மூவராவர். அந்த ஏடு தந்த கருத்துக்களைத்தான் இப்போது தந்திருக்கிறோம். சிந்தியுங்கள்!

இந்த நிகழ்ச்சி நமக்குத் தரும் பாடம் ஒன்றே ஒன்றுதான். காங்கிரசார் சாதியைக் காட்டி, பணத்தைக் காட்டி, ஆண்டான்-அடிமைபேதங்களைக் காட்டி ஊரை ஏய்த்த காலம் போய்விட்டது. இனியும் அது செல்லாது! அந்த வழிகளை உணர்ந்து, தயாராகிவிட்ட சுதந்தரா கட்சியின்முன், காங்கிரசு வெல்லவே வெல்லாது!

இவ்வளவையும் நான் எழுதுவதன் காரணம், சுதந்தரா கட்சிக்கு வக்கலாத்து வாங்குவதில்லை. நாடெங்கும் பரவலாக ஆச்சாரியார் வேரூன்றி வருவதால், அடுத்த தேர்தலில் தம் பதவிகள் பறிபோய்விடுமே எனக் காங்கிரசார் அஞ்சுகின்றனர். அதனால்தான் ஆச்சாரியாரை அவமானப்படுத்தும் அளவிற்குத் தீயன புரிகின்றனர். "இது எதிர்க்கட்சிகளின் நலனுக்குகந்ததல்ல; காங்கிரசாரின் வெறியை முறியடிக்க இப்போதே எதிர்க்கட்சிகள் தயாராகவேண்டும்!" என்பதைக் குறிக்கவே இதனை எழுதுகிறேன்!

வாக்காளர் பெருமக்கள் ஒரு பெரும்போரைக் காண இப்போதே தம்மைத் தயார் செய்துகொள்வராக!

★

— 2-ம் பக்கத் தொடர்ச்சி —

கேரளத்திற்கு வந்திருந்தார்! அங்கேயிருந்த இயற்கை அழகினைப் புகைப்படம் எடுத்ததுடன் எழுதவேண்டிய விபரமான குறிப்புகளையும் உடனுக்குடன் பதிந்துகொண்டார்! அவரின் பெயர் சேப்சு ஆர் மார்ட்டின் என்பதாகும்! குறிப்புகள் இல்லாமல் தன்னால் விரிவுபடுத்தி எழுத இயலாது என்றார். "நானும் சுற்றுப் பயணத்தின் காட்சிகளையும் நிகழ்ச்சிகளையும் 'தென்றல்' என்னும் இதழில் எழுதிக் காட்டுவேன். ஆனால் அதற்குக் குறிப்புகளை இப்போதே எழுதிக்கொள்ள இயலவில்லை" என்று தெரிவித்தபோது வியப்புடன் தன் விழி உயர்த்திக்காட்டினார்! தழுவி மகிழ்ந்தார்! "கேரளத்தைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?" என்று மார்ட்டினிடம்கேட்டேன் "The Land we have lost" என்றார். கம்யூனிஸ்ட் சர்க்கார் கவிழ்க்கப்பட்டதற்குக் காரணம் அமெரிக்க சதிதான் என்று வாதாடிக் காட்டினார். இந்தியக் கம்யூனிஸ்ட்களை "Beloved Brothers and Comrades" என்று களிப்புடன் குறிப்பிட்டார்! திராவிட முன்னேற்றக் கழகத்தின் பிரிவினை இலட்சியத்தைச் சொன்னேன். உடனே அவர் சான்றுகக் காட்டி விளக்கம் பெற்றுக்கொண்டார்! என்னைப் புகைப்படம் எடுத்துக்கொண்டு - புகைப்படக் கருவி வைத்துக்கொள்ளும்படி ஆய்வுரையும் தந்து விடைபெற்றார்!

திருவனந்தபுரம் மார்ட்டின் சந்திப்பைத் தந்து மகிழ்வித்ததுபோலவே, கடற்கரை சீனத்து நண்பர்களின் உறவையும் உரையாடலையும் பெற்றுத் தந்தது! இரு ஆண்களும் ஒரு பெண்ணும் கொண்ட அந்தக் குழு பார்மோசாவிலேயிருந்து இந்தியாவுக்கு வந்தவர்களைக் கொண்டதாகும். திருவனந்தபுரத்தில் உள்ள உலக சுற்றுப் பயணக் கழகத்தின் ஆங்கிலமொழி பெயர்ப்பாளர் கடற்கரைக்கு அவர்களுடன் வந்திருந்தார்! கடல் அலைகளின் ஓரத்தில் ஓடி விளையாண்ட அவர்களின் செயல் என்னைச் சிரிக்க வைத்தது. அந்தப் பெண் மொழிபெயர்ப்பாளரின் வாயிலாக நான் சிரித்ததற்குக் காரணம் கேட்டார். 'எங்கள் நாட்டில் 30 வயதுக்குமேல் பெண்கள் ஓடி விளையாடும் வழக்கமில்லை' என்றேன் நான்! சீனர் இருவரும் சிலையாக நின்றனர். 'சீனத்துக்கிளி' ஊமையானது! கடலோரத்தில் கட்டுமரமேறி மீன் பிடிக்கச் செல்வோரின் அணிவகுப்புத் தயாராகவே எல்லோரும் அங்கே கவனம் செலுத்தினர்! திருவனந்தபுரம் கடற்கரை நாம் வியப்புறும் அளவு அழகானதாக இல்லை! வெளியூர்ப் பிரயாணிகள்தான் அதிகமாகக் கடற்கரையில் காணப்பட்டார்கள்! துறைமுகம் ஆழமாக அமையாததால் கப்பல்கள் நடுக்கடலில் நின்றன! ஈழவர்கள் என அழைக்கப்படும் மீன் பிடிப்போரின் வாழ்க்கையிலே எத்தனையோ கோணல்கள், கடல் அலைகளின் எண்ணிக்கைக்கும் மேலாக உள்ளனவாம! கேரளக் கிளர்ச்சிப் புயலில் அவர்கள் சிக்கித் தவித்த சோகக் கதைகள் நெஞ்சில் இரத்தஞ்சுரக்கச் செய்தன! 'ரம்சான்' விழாவன்று புது ஆடைகள் காற்றிலே அசைந்தாட அணிவகுத்து வந்தோரின் எண்ணிக்கை அதிகம்- சுடுமணலில் சுந்தரச் சோலைகள் உருவாயின! கடல் தாண்டிச் செல்லும் படகுகளைவிட்டுப் பார்வையைத் திரும்பவும் நகர் நோக்கித் திருப்பினேன். வழியில் சர்க்கார் கண்காணிக்கும் மீன் வகைகள் வளர்ப்புச்சாலையை ("அக்குரியம்") அடைந்தேன். பலவண்ணச் சிறப்புடைய மீன் வகைகள் கண்ணாடித் தொட்டிகளின் உள்ளே நீந்தி விளையாடிக்கொண்டிருந்தன. இரண்டு பெரிய கடல் ஆமைகள் பழுப்பு நிறத்துடன் பறந்து செல்லும் பாணியில் மிதந்து சென்றன! 'அக்குரிய"த்திற்கு அருகில்தான் பெண்கள் விளையாட்டுக்கல்லூரி பெரிதாக அமைந்துள்ளது. இதற்கு நேர் எதிரே விமான நிலையம் - பார்க்கத் தக்கதாக இல்லை! இந்தப் பகுதியிலேதான் சர்க்கார் பொறுப்பிலே இயங்கிவரும் ரப்பர்த் தொழிற்சாலை- சைக்கிள் சக்கரத் தயாரிப்பு நிலையம், தனிப்பட்டோரின் ஓடு தயாரிக்கும் நிலையங்கள் அமைந்துள்ளன.

— 10-ம் பக்கம் —

கல்லூரிக் கவியரங்கம்

7. வீரம்

★

சிதறிய கதிரை நீங்கிய சிறுதுளி உலகாய் ஆயிட
முதலிலே உயிர்கள் தோன்றிய முதுநிலந் தனிலே தோன்றியும்,
முதுபிணி எதுவு மின்றியே முடிந்திடா இளமை கொண்டனே;
முதுபெரு மொழியே தமிழே முடியுடன் நெடுநாள் வாழ்க !

வாழ்தமிழ் வளர்க்க வல்லீர் வணங்குவன் உமைநான் என்றும்;
சூழ்ந்திடும் இடர்கள் நீங்கிச் சுடர்விடும் தமிழில் ஈங்குத்
தாழ்ந்தவென் படைப்பை நானே தங்களின் முன்னர் வைப்பேன்,
ஆழ்ந்திடும் அறிவில் மிக்கீர் அன்புடன் ஏனமன் னிப்பீர் !

மாற்ருர் மாட்டே வெற்றி மாள்வோம் நாமென் றஞ்சி,
மாற்ருர் தம்மைத் தாக்கி மாமறம் விளைத்தல் நீக்கிக்
காற்றெனப் புறத்தைக் காட்டிக் காண்பவர் நகைக்க ஓடல்
போற்ருத் தன்மை தானும் போற்றும் வீர மாகும்.

பகைத்தவர் புரிந்த போரினில் படைக்கலம் இழந்த போதிலும்
திகைத்தவர் உளத்தினில் உழன்றிடா திருக்கவே அமர்க்களம் அதனிலே
மிகைத்திறம் உடைய ராயிடின் மறுமுறை படைகள் ஈந்திடும்
வகைத்தே வீரம் என்பதை வழுவில் நூல்கள் கூறிடும்.

கூற்றுவன் வரினும் ஒன்ருய்க் கூடியே எதிர்த்து நிற்கும்
ஆற்றலே உடைய தொன்றே ஆய்ந்திடிற் படையாம் என்று
மாற்றிலாப் பசும் பொன் ஞும்நம் மாத்தமிழ் மறையுங் கூறும்;
ஏற்றமே உடைய நீவிர் ஏத்திடும் மறமும் ஈதே !

போர்மேற் கொண்டு வீரர் போனுற் பின்னர் ஆங்கே
கூர்வேல் பாயக் கண்டும் குன்ருு நெஞ்சம் கொண்டு
மார்பில் அம்பு தைத்தும் மங்காத் திண்மை கொண்டு
போரில் வெற்றி காணல் பாரில் வீரம் என்ப !

குருதியை நினைத்துத் தன்னுளம் குறுகிடா உறுதி கொண்டவர்,
கருதிய செயலை என்றுமே கருத்துடன் முடிப்பேன் என்பவர்,
வருதுயர் அடுக்கியே பெருகினும் வருத்தமே அடைகிலா தவருமே,
கருதிடில் மறவர் என்றே கற்றவர் உரைத்து நிற்பார்.

களத்தினில் புரிந்த போரினுல் களைப்படைந் தெதிரி நின்றிடின்
உளத்தினில் கருணை ஓங்கிட உதவிகள் புரிவோர் மட்டுமே
விளங்கிடும் மறவர் என்றுநம் வியன்தமிழ் நிலத்தோர் கூறிடும்
களங்கமில் கருத்தினை உலகினர் களிப்புடன் சரியென உரைப்பரே !

நுண்ணிய முனைகொள் வேலை நுட்பமாய்ப் பகைவர் எய்தால்,
எண்ணிட முடியா வண்ணம் எங்கணும் வாளைக் கண்டால்
கண்ணினை இமைத்தல் கூடக் கண்ணியம் இலையாம் என்று
எண்ணிடும் இயல்பின் வீரம் ஏற்றமே உடைய தொன்ரும்.

பரிதனில் அமர்ந்து செல்பவர் பகைவரின் படையைப் பார்த்தபின்
தெரிந்தொரு வனையே கூவுவர் தெளிவுடன் இணையாய்ப் போரிட
பெரியவர் சிறியரை அழைத்திடல் பெரிதொரு பிழையெனக் கருதிடும்
நெறியுமே சிறந்த வீரர் நேரிய இயல்பைக் கூறும்.

வீரனை முதுகில் ஏற்றி வீறுடன் திரிந்த யானை
பாரினர் வியக்கும் வீரம் போரினில் விளைத்த தாலே
சீருடை அழகே மயங்கச் சீர்மிகு பிடியைக் காண
மீறிடும் வெட்கங் கொண்ட மாட்சியும் மறமா கும்மே !

புலிமிகக் கொடிய தென்பது புரிந்துமே தமிழ்ப்பெண் தானவள்
எலியென அதனை எண்ணியே எளியதாய் முறமெ டுத்தனள்;
புலியுமே அதனைக் கண்டபின் பதுங்கியே மறைந்த தென்பது
வலிமிகும் தமிழர் வாழ்வினில் விளங்கிய மறமென் ருகிடும்.

தமிழரை வடக்கில் ஆண்டவர் தருக்குடன் இகழ்ந்த போதினில்
தமிழரின் திறமை காட்டிடத் தமிழரின் புகழை நாட்டிடத்
தமிழரின் படையெ முந்தவர் தருக்கினைத் தொலைத்த தென்பது
தமிழரின் மறத்தை நானிலம் தெரிந்திட உரைப்ப தல்லவா ?

வாளினைச் சுழற்றக் காணின் வையகம் வணங்கி நிற்கும்.
தோளதன் வலிமை காணின் தோற்பராம் எதிரில் வந்தார்.
ஏளனம் புரிந்து விட்டார் எம்மரும் மறவர் தம்மின்
தாளினைப் பணிந்தா லன்றித் தப்புதல் அரிதாம் மண்மேல்.

மன்றினில் அமர்ந்துறை பெரியீர் மண்ணிடைத் தமிழரின் மறத்தை
அன்றொரு பொழுதினில் அவனி அன்புடன் புகழ்ந்ததற் கிணையாய்
இன்றுமே உலகில் ஓங்கி இன்பமுற் றிருக்க எண்ணின்
என்றுமே இணைந்து ழைத்து ஏற்றமே பெறுவோம் நாமே !

—சி. நடராசன்.

★

★

சென்னை-
பச்சையப்பன் கல்லூரி
மாணவர் இவர்.
பெயர் சி. நடராசன்.

★

அங்கேரியில் ஏறத்தாழ எல்லாக் குடும்பங்களும் தமக்கெனச் சொந்தமாய் வானொளிப் பெட்டிகளை வைத்திருக்கின்றனர்.



செழியன் உலா

- மா. முத்துராமலிங்கம் -

கனம் காமராசர் வடநாடு செல்லப் போகிறாராம். ஆச்சாரியார் சுற்றி விட்டு வந்த ஊருக்கெல்லாம் இவரும் போய்ச் சுற்றி, சூருவளிப் பிரசாரப் பயணம் செய்யப் போகிறாராம்! அந்தப் பயணம் எப்படியிருக்கும் என்று கற்பனை செய்து பார்த்தால்...

ஆகாய விமானம் புறப்படுகிறது. வழியனுப்பக் காங்கிரசு சேவாதளத் தொண்டர்கள் வரிசை வரிசையாக வந்து நிற்கின்றனர். காகித மாலைகள் மலை மலையாக வந்து குவிகின்றன. காமராசர் தலையோ உடலோ தெரியவில்லை கடைசியாக அளகேசன் மாலைகளை எடுத்து, காமராசரைக் காப்பாற்றிவிடுகிறார்.

"நீங்கள் நடத்தும் வழியனுப்பு விழாக் கண்டு நான் மயங்குகிறேன். நீங்கள் எத்தனை மாலைகள் போட்டீர்கள் என்று என்னால் எண்ணவே முடியவில்லை நானும் ஒன்னு, ரெண்டு என்று பத்துவரைக்கும் எண்ணி வந்தேன். அதற்குமேல் எண்ணமுடியவில்லை. 'பத்துக்குமேல் உனக்கு எண்ணத் தெரியாதா' என்று கேட்டுவிடாதீர்கள். பத்து மாலை விழுந்தவுடனே என் கண் மறைக்கப்பட்டுவிட்டது. அதனால் தான் எண்ண முடியவில்லை! என் கண் என்னை ஏமாற்றினால் நான் என்ன செய்வேன்? இந்தச் சுற்றுப் பயணம் முடிந்தபின் எல்லோரையும் பார்க்கலாம்!" என்று 'பேசி'த் தன் நன்றியைத் தெரிவித்தார் காமராசர்.

முதல் அமைச்சர் உட்கார்ந்ததும் அளகேசன் பேசத் தொடங்கினார்.

"கனம் காமராசர் அவர்களே! நேரு அவர்கள் வாசஸ்தலத்திற்குச் செல்லும் தாங்கள் வெற்றிக் கொடியுடன் திரும்ப வேண்டுகிறேன். நாங்கள் எத்தனை மாலைகள் போட்டோம் என்று தங்களுக்குத் தெரியாததால் 134 மாலைகள் போடப் பட்டன என்பதைக் கணக்கிட்டுத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். 'அதெப்படி அவ்வளவு உறுதியாகச் சொல்கிறாய்?' — கேட்கக் கூடும் நீங்கள். 134 பேர்களைத் தான் நான் ஏற்பாடு செய்தேன்..." என்று அளகேசன் தன் "தமிளில்" சொல்லி முடிப்பதற்குள், காமராசர் அவர் சட்டையைப் பிடித்திழுத்து உட்கார வைத்துவிட்டார்.

கூட்டம் முடிந்தபின், அளகேசனைத் தனியே அழைத்து, 'ஏன் காகித மாலையாய் வாங்கி வரச் சொன்னாய்?" என்று கேட்டார் காமராசர்

"பூமாலை என்றால், நீங்கள்போய்ச் சேர்வதற்குள் அது வாடிவிடுமே! அதனால்தான்...நீங்கள் இவ்வளவு மாலைகளோடு வழியனுப்பப்பட்டிருக்கிறீர்கள் என்பதைப் பார்த்ததும் அவர்கள் மயங்கிவிடுவார்களே! அதற்காகத்தான்..." என்றார் அளகேசன்.

பம்பாய் வரவேற்பு

பம்பாய் விமான நிலையத்தில் வந்திறங்கியதும் பத்திரிகை நிருபர்களும், காங்கிரசுத் தலைவர்களும் சூழ்ந்துகொள்கின்றனர் "ஆகா! என்னை வரவேற்க இவ்வளவு பேரா? ஏ... ஆத்தா... எத்தனை பேரு?" என்று காமராசர் திகைத்தார்.

பக்கத்திலிருந்த தமிழ் ஏட்டு நிருபர் ஒருவர் ஆட்களை அறிமுகப்படுத்தி வைக்கத் தொடங்கினார்

"இவர் தானுங்க வால்சந்த் பூல்சந்த்! தெரியுங்களா?" என்றார் நிருபர். எங்கோ கவனமாக இருந்த காமராசர், 'வால்சந்தா? நம்மூரில் ஒடுக்குச்சந்து, நீளச்சந்து, குறுக்குச் என்றுதான் உண்டு. வால்சந்துன்னு ஒன்னும் கிடையாதே!" என்றார். நிருபர் திண்டாடிக் கொண்டு, 'அய்யா! வால்சந்துன்னு ஒரு கப்பல் முதலாளி பெயர்! தெரிஞ்சதுங்களா?" என்றார். உடனே காமராசர் சுதாரித்துக்கொண்டு "கப்பல் முதலாளியா? அப்போ நமக்கு வேண்டியவராச்சே! தேர்தல் நிதிக்கு எவ்வளவு தருவார்?" என்றார்

நிலைமை மீறுவதைக் கண்ட நிருபர் "பாண்டை" வாசிக்கச் சொன்னார். சத்தம் கிளம்பியது; காமராசர் பேச்சு அடங்கியது!

பம்பாய் பிரதேசக் காங்கிரசுக் கமிட்டித் தலைவர் வரவேற்புரையை வாசிக்கிறார்:

"மௌன குருவே! மிஸ்டர் மதராசே!

தங்கள் வருகையால் எங்கள் பம்பாய் வளம் பெறுகிறது. ஆகா! தங்கள் வரவு கண்டு எங்கள் முகம் பூரி என உப்புகிறது. தங்கள் ஊரில் தாங்கள் எப்படி எதிர்க் கட்சியினரை எல்லாம் அடக்கி ஒடுக்கி ஆட்சிக்கு வந்தீர்கள்! அந்த அரிய வித்தைதான் என்ன?

கேரளத்தேர்தலுக்கு '57-ல்எங்கள் பட்டீல் அனுப்பப்பட்டிருந்தபோது, "தேர்தல் பிரச்சாரத்திற்கு சினிமாப் படம் எடுக்க வேண்டும்!" என்றார். அதற்கு அ இ கா. கமிட்டியினர் மறுத்துவிட்டனர். தாங்களோ, தங்கள் நாட்டில் இருக்கும் தி.மு கழகத்தாரைக் கூத்தாடிகள் என்று சொல்லிவிட்டு. தேர்தலின்போது 'நமது கடமை' என்று சினிமா எடுத்து வெளியிட்டீர்களாமே! அதனால்தான் வெற்றி பெற்றீர்களா, விருதுபட்டி வீரரே? ஆனால் அண்மையில் தில்லி தேசாய் திரைப் படங்கள் மேல் பாய்ந்தது போதாதென்று, தமிழ்நாட்டு அளகேசன் வேறு இராசபாளையத்திலிருந்து சினிமாமீது பாய்ந்திருப்பதாக அறிகிறோம். இதனால் சினிமா முதலாளிகள் முணுமுணுப்பதாகவும் அறிகிறோம். இதற்கும் தங்கள் விளக்கம் தேவை!

தங்கள் மாநிலத்திற்குத் தமிழகம் என்று பெயர் வைக்க மறுத்துவிட்டிருக்கிறீர்கள், நேரு பெருமானின்விருப்பப்படி. ஆனால்இங்கேசிலர்பம்பாயை இரண்டாகப் பிரித்ததுமல்லாமல் குசராத், மராத்தியம் என மொழிப் பெயர்களை மாநிலங்களுக்குச் சூட்ட வேண்டும் என்று முயன்று வெற்றியும் பெற்றுவிட்டனர் அவர்களுக்குத் தாங்களாகிலும் புத்தி சொல்லித் திருத்த வேண்டுகிறோம். தங்கள் ஊரான விருதுபட்டியை, அழகு கருதி விருதுநகராக்கத் தாங்களும் ஒத்துக்கொண்டதாக ஒரு பேச்சு அடிபடுகிறது. உண்மையா? ஆணழகரே! அடலேறே!

ஆச்சாரியாரை வீழ்த்த நாங்கள் இராமாயண நாடகம் தயார் செய்யத் திட்டமிருக்கிறோம். தாங்களும் வந்து நடித்துத் தருவதோடு தங்கள் மந்திரிகள் இரண்டு மூன்று பேரையும அனுப்பி உதவவேண்டுகிறோம். வாழ்த்துகிறோம்! வாழ்க! வாழ்க!

தங்கள

ப. பி. கா. க."

வரவேற்பு முடிந்ததும் காமராசர் நன்றி சொல்கிறார்:

'நீங்க இத்தனை பேரு கூடி என்னை வரவேற்றதற்கு நன்றி சினிமா விசயம் சொன்னீங்க.. இந்த ராசாசி, சினிமாவிலே நடிக்கப்போறதாக வதந்தி. அதனாலேதான் அவர் சினிமா மேலே பாயப்போறதாகப் பேசினார். ராசபாளையம் போயிட்டா அந்த நினைப்புத்தான் வரும். கோவிச்சிக்காதீங்க. அடுத்தாப்பல ..விருதுபட்டியை விருதுநகரா மாத்தினது நானில்லை. எந்தப் பேரையும் மாத்தறதுக்கு எனக்குத் துணிச்சல்... இல்லே! மத்தபடி அண்ணுச்சி பக்தவத்சலத்தை மட்டும் அனுப்பி வைக்கிறேன். எப்படியாலும் நாம இந்த ராசாசியை ஒழிச்சாகணும் ஏன்னு இந்த ராசாசி, கம்யூனிஸ்டுகளுக்குக் கால்பிடிக்கிருரு; அமெரிக்காவுக்கு வால் பிடிக்கிருரு! ஆனதினலே நீங்கள் எல்லாம் தேர்தல் நிதி தந்தா எனக்குக் கவலையே இல்லை! நானும் என் மகன் கக்கனும் கூடி அந்த ராசாசியை ஓட ஓட விரட்டிப்பிடுவோம்!"

x x x

பாட்னு ஊர்வலம்

பாட்னுவில் பரபரப்பான வரவேற்பு. ஊரே ஒரே அல்லோலகல்லோலம். ஓர் அப்பாவிக் கிழவர் வழியில் வருவது ஊர்வலம் என்றும் அறியாமல், ஊர்வலத்தின் நாயகர் மிஸ்டர் மதரூஸ் என்பதையும் அறியாமல், "அது என்ன? எங்கேயிருந்து பிடிச்சு வருருக?" என்றார்.

"ஒதுங்கிப்போய்யா! வருறவரு மிஸ்டர் மதரூஸ்!" என்கிறான், ஒருவன். இரு ஓரங்களிலும் பார்சி மாதர்கள் நின்று பணிமலர் தூவுகின்றனர். குதிரையின்மேல் ஆரோகணித்துவரும் காமராசர் புன்னகை சிந்துகிறார். இளைஞர்கள் "காமராஜ்ஜீ ஜே! காமராஜ்ஜீ ஜே!" என்று கத்துகின்றனர்.

ஊர்வலம் கூட்டம் நடக்கும் இடத்தை நெருங்குகிறது. காமராசர் பக்கத்திலிருந்த ஒருவர், அதை தெரிவிக்கிறார்.

"அப்படியா? கூட்டத்துக்கு எத்தனைபேர் வருவார்கள்?"

"சுமார் 1000 பேர் வரலாம்!"

"அப்போ 5000 போலீசாகிலும் வந்திருக்கா!"

"ஓ! ஒவ்வொரு ஆளுக்கும்பத்துப் போலீசார் நிற்கின்றனர். எந்தப் பயலும் கையைக் காலை ஆட்ட முடியாது! ஆமா...!"

"அப்ப....சீக்கிரம் போகலாம்!" என்றார் காமராசர்.

x x x

வாரணசியில், வடக்கு-தெற்கு

வாரணசியில் புகைவண்டி வந்து நின்றதும் ஒரே அமர்க்களம். காமராசருக்கு முன்னேயும் பின்னேயும் ஒரே கூட்டம். அத்தனைபேரும் வாரணசியில் புண்ணியம் தேடிக் கொள்ளவந்த பண்டாரங்கள். பண்டாரங்களுக்கிடையே அகப்பட்டுக்கொண்ட பரம பண்டாரக் காமராசரை, வாரணசி காங்கிரசார் காப்பாற்றி வண்டியிலேற்றிச் செல்கின்றனர்.

நேரே கூட்டத்திற்குப் போன காமராசரை அவ்வூர்த் தலைவர் போலோராம் வரவேற்றபின், காமராசர் பேசுகிறார்.

"இந்த வாரணசிக்கும் தமிழகத்திற்கும் நெடுநாள தொடர்புண்டு. எங்கள் மூதாதையர் பலர், காசியில் இறக்கப் புண்ணியம் என்று சொல்லப்படுவதால் இங்கே யாத்திரை வந்து செத்ததையறிவேன். எங்கள் நாட்டிலிருந்து இப்போது இங்கே வருவோர் தொகை குறைந்திருப்பதாகத் தலைவர் குறிப்பிட்டார். எங்கள் நாட்டில் ஆச்சாரியார் இராமாயணப் பிரசாரத்தைத் தீவிரமாகச் செய்து, 'காசி வடநாட்டில் இருகிறது;நீங்கள் எல்லோரும் தென்னுட்டில் உள்ள இராமேசுவரத்திற்கே செல்லவேண்டும்!' என்று சொல்லி வருவதுதான் இதற்குக் காரணம்! எனவே தென்நாடெங்கும் காசியைப் பற்றிப் பிரசாரம் செய்ய, நீங்கள் காசினை வாரி வழங்குங்கள்!" என்று கூறி முடித்தார்.

உடன் சில கேள்விகள் பறந்தன.

"காசிக்கு வந்துபோகிறவர்கள் ஏதேனும் ஒன்றை விட்டுவிடுவது வழக்கம். நீங்கள் எதை விட்டுவிடப் போகிறீர்கள்?"

–முதல் கேள்வி!

"பார்க்கலாம்! கவனிக்கலாம்! இந்த இரண்டையும்!"

–காமராசர் பதில்.

ஒரே மகிழ்ச்சி ஆரவாரம்.

"நீங்கள் நின்று பேசும் ஊரை வாரணசி என்று பழம் பெயர் காரணம் காட்டி மாற்றிவிட்டார்கள். நீங்கள் மட்டும் உங்கள் நாட்டுக்கு தமிழ்நாடு என்ற பழம் பெயரை மாற்ருததேன்?"

–இது இரண்டாம் கேள்வி.

"யாரோ தி. மு. காக்காரன் இங்கேயும் வந்துவிட்டான். போலீசு! உடனே பிடி!"

–காமராசர் ஆணையிட்டார். கூட்டம் கலைந்தது.

x x x

தில்லி நகரசபை வரவேற்பு முடிந்ததும், விடைபெற்றார் காமராசர்.

மீனம்பாக்கம் விமான நிலையத்தில் அளகேசனல் அழைத்து வரப்பட்ட சினிமா நடிகர்களும சேவாதளத் தொண்டர்களும் திரண்டு நின்று, "காமராசர் வாழ்க! வாழ்க!" என்று கத்தினர்.

காமராசர் தனது வடநாட்டு அனுபவங்களை வகை வகையாகச் சொன்னார். அவை அடுத்த இதழில்.

ஆசிரியர் கண்ணதாசன் நிகழ்ச்சிகள்

ஏப்ரல்

23	சென்னை 33-ம் வட்டம்
24	,, 97-ம் வட்டம்
25	விருத்தாசலம்
26	கடலூர்
27	கொரடாச்சேரி
28	பரமக்குடி
29	பொன்னமராவதி
30	காரைக்குடி
	குருவிக்கரம்பை.

மே

9	ஆலம்பாக்கம்
14	செங்கல்பட்டு
15	திருப்பத்தூர் (வ. ஆ.)
22	சென்னை 86-வது வட்டம்.

குறிப்பு :-மேற்குறிப்பிட்ட கூட்டங்களைத் தவிர வேறு எந்தக் கூட்டங்களிலும் கலந்துகொள்ள இயலாமைக்கு வருந்துகிறேன். சூலை முடிய வெளியூர்களிலோ சென்னையிலோ எந்தவிதமான பொது நிகழ்ச்சிகளுக்கும ஒப்புதலளிக்க இயலாதவனுயிருக்கிறேன். எழுதிய கடிதங்கட்குப் பதில் கிடைககாத நண்பர்கன் இதையே பதிலாகக் கருதி சூலைக்குப் பிறகு நினைவுபடுத்தக் கோருகிறேன்.

கண்ணதாசன்

கனவு :

"இதோ! இன்னும் தெரிகிறது! நினைவுத்திரையில் அத்தனையும் ஒளியாட்டம் ஆடுகின்றன. குமுத விழியார் யாத்த செஞ்சொல் காவியமாக அத்தனையும் ஒளிர்கின்றன. கண்ணும் கண்ணும் கலந்த கதை கருவாகியது; பெருகி ஓர் உருவாகியது; தொல்லையின்றிப் பிறந்தது; அந்தக் காதல் மழலையும் சிந்தியது; இளமையும் பொலிந்தது! அந்தோ, முதுமையும் வந்ததே! முதுமை கொட்டும் கொடுமைகள் ஒன்ரு இரண்டா? "நீ சாகப்போகிருய்! நீ சாகப்போகிருய்!" என்று நாள் தோறும் பறைசாற்றுகின்றதே இந்த முதுமை! "நீ காலத்தின் எல்லைக் கோட்டுக்கு வந்துவிட்டாய்! காலத்தின் எல்லைக்கோட்டுக்கே வந்துவிட்டாய்!" என்று பன்னூறு முறைகள் அலறுகிறது இந்த முதுமை.

அந்தக் காதல் முதுமையை-காலம் வகுத்த எல்லைக்கோட்டை, வெல்லத் துடித்தேன்; துடிக்கிறேன்! ஆனாலும் பயனில்லையே!

எதையும் புதை குழிக்குள் தள்ளும் காலத்தின்முன் என் ஆசைகள் அத்தனையும் கனவுகள்தானு?

என் ஆசைகளுக்கு ஒரு விடிவும், இத்தொல்லைகளுக்கு ஒரு முடிவும் இல்லவே இல்லையா?

பருவத்தின் ஆசைகள் அனைத்தும் காலக்கனவுகள் தாமா? வாழ்வை வகுக்கும் வலிய தூண்களில்லையா? அத்தனையும் அனல்பட்டுக் கரையும் மெழுகா? புனல்பட்டு மறையும் உப்பா?"

—ஓயாத சிந்தனையில் மூழ்கிக் கிடந்தது குமரனின் நெஞ்சம். அவன் கொடுமைகளால் துளைத்தெடுக்கப் பட்டுக்கொண்டிருந்தான்.

"தந்தநாயகே உங்களைக் காண வந்திருக்கிருர்!' என்ருன் வேலையாள்.

"வரச்சொல்! துன்பம் இன்று வந்தால் என்ன? நாளைக்கொன்ருல் என்ன?"

சலிப்புடன் கூறிக்கொண்டே, நிமிர்ந்து உட்கார்ந்தான் குமரன். தந்தநாயகே, இதழ்களில் வஞ்சகம் விளையாட உள்ளே நுழைந்தான். பணியாள் வெளியே போனுன்.

"உன்னை இப்படிக் கட்டிலில் காண மிகவும் வருந்துகிறேன்!"

தந்தநாயகே சொன்னுன்.

"ஆமாம்! பாடையில் கண்டால் உங்கள் உள்ளம் குளிரும்! அல்லவா?"

குமரன் குமுறினுன்.

"சரியாகக் கணக்குப் போட்டிருக்கிருய், குமரா! என்ன இருந்தாலும் நீ எங்களோடு பழகியவன்தானே?"

"அது மட்டும் நடக்காது தந்தநாயகே! என்னைக் கொன்றுவிட்டு நீ அமைதி காணலாம் என்று நினைக்காதே! உன்னை ஓட ஓட விரட்டிக் கொன்றே தீர்வேன்!"

குமரன் கொதித்தான்.

"இப்படித்தான் மாற நம்பி சொல்லிவிட்டு, இளவரசரைக் கொல்லக் கோட்டைக்குள் ஏறிக் குதித்தான். எங்கள் காவலாளியை முதுகில் தாக்கிக் கொன்றுவிட்டு, அவன் கச்சையை எடுத்துக்கட்டி உருமாறி வந்தான். குமரா! அவன் என்ன ஆனுன் தெரியுமா? அவன் கட்டிவந்த கச்சையில் பட்டுக்கிடந்த குருதியே அவனைக் காட்டிக் கொடுத்தது. சிங்களவன் குருதியைக் குடித்தது அவன் வாள்; அவன் குருதியைக் குடித்தது மன்னரின் வாள்! தெரிந்துகொள அந்தக் கதையையும்!"

"தம்பி! தம்பி!"

குமரனுல் இப்படித்தான் அலற முடிந்தது. வேறு ஏதும் சொல்ல முடியவில்லை.

சில விஞடிகளை அமைதி விழுங்கிற்று.

குமரன் திடீரென்று எழுந்தான். அவன் எழுந்த வேகத்தின் பொருளைப் புரிந்துகொண்ட தந்தநாயகே ஒதுங்கிக்கொண்டான்.

"மறுபடியும் உனக்கு நப்பாசை! கூடாது குமரா, கூடாது! ஏனே நீ புலியைத் தாக்கமுடியாது திரும்பி வந்தாய். காரியார் மட்டும் எச்சரிக்கைக் குரல் கொடுக்காதிருந்தால் நீ தப்பியிருக்கவேமாட்டாய். அவர் குரல் கொடுத்ததால் நீ திரும்பினுய்; தப்பினுய். உன் தோள்பட்டைச் சதையில் சிறிது மட்டும் அதன் நகங்களுக்குப் பட்டது; நீ சுதாரித்துக் கொண்டாய; புலி மாண்டது; நீ வென்ருய்! ஆனல் நீ இப்போது எதிர்ப்பது காட்டுப்புலியை யில்லை; சிங்களப்புலியை! அதுவும் பட்ட காயம் ஆருத நிலையில்...!"

குமரனை அவமானம் கொத்திப் பிடுங்கித் தின்றது. வழ்வதைவிட மானத்துடன் மாள்வதையே இப்போது அவன் விரும்பினுன். "கண்மணியைக் கவனித்துக் கொள்ள முத்துவீரப்பரே போதும்!" என்ற துணிச்சல் பிறந்தது. வாளை எடுத்து வீச ஓடினுன். தநதநாயகே தப்பி ஓடினுன். அவன் குமரன் கையில் சாவதற்கா, தமிழ்நாட்டுக்கு ஓடி வந்தான்?

★

"அனுராதபுரத்துக் குணதிலகேயின் ஓலை வந்திருக்கிறது அரசே!"

இளவரசனுயிருந்து அரசனுகிவிட்ட அமரசேனே வாயைத் திறந்தான்.

"தீராத தொல்லை! தட்டிக் கழிக்கவும் முடியவில்லை! எனக்கும் இந்த ஆசை வந்திருக்க வேண்டியதில்லை. அவனுக்கும் அந்த வெறிமூண்டிருக்க வேண்டியதில்லை. வரச்சொல், ஓலை கொண்டு வந்தவனை!"

ஓலையாள் வந்தான்; தந்தான்; அமரசேனே படித்தான்; சினந்தான்.

"வராத பொன்னிலவை, நினைத்தவுடன் வாவென்று அழைத்து வந்துவிட முடியுமா? 'வானத்தை அழகு செய்ய வேண்டியது உன் கடமை!' என்று இதம்பதமாகத்தான் சொல்லமுடியும்! வம்பு செய்தால் அத்தனையும் கெட்டேவிடும்! புரியாத வெறியர்களிடை இந்தப் பணியாத பொற்கொடி! எனக்கோ ஒரே தலைவலி!"

சுவரைப் பார்த்து முகத்தைத் திருப்பிக் கொண்டு முணமுணத்தான். அமரசேனே!

"பதில் வாங்கி வரச் சொன்னுர், மன்னவா!"

ஓலையாள், அமரசேனேயின் கடமையை நினைவுபடுத்தினுன்.

"பதில்!"

ஆத்திரத்தைக் காட்டமுடியாமல் அவன் திணறினுன்.

"ஐந்து நாள்கள் கழித்து ஆள் அனுப்புகிறேன் என்று சொல்!"

வந்தவன் போனுன்.

இந்த மன்னவன் வெந்தான்.

ஒன்றுக்காசைப்பட்டால், துன்பங்கள் எத்தனை குறுக்கிடுகின்றன!

★

பொருள்களெல்லாம் இரைந்து கிடந்தன. எதுவும் இருக்க வேண்டிய இடத்தில் இருக்கவில்லை.

கதவை உடைத்துக்கொண்டு உள்ளே நுழைந்த முத்துவீரப்பர் இடுகாட்டமைதியைக் கண்டார். வாழ்வின் முடிவிடத்தில் எலும்புத் துண்டுகள் அங்கங்கே சிதறிக் கிடப்பதுபோல், பொருள்களெல்லாம் சிதறிக் கிடந்தன.

முத்துவீரப்பர் கையிலிருந்த கண்மணி "அப்பா"வைத் தேடினுள்; காணேம். அவளுக்குக்கூட நிலைமை புரிந்துவிட்டதுபோலும்; அழுதாள்.

பெரியவர் ஒவ்வொன்ருகத் தேடினுர். அவர் கைகள் ஆடின; விழிகள் மழை பெய்தன.

நடக்கக்கூடாத ஏதோ ஒன்று நடந்துவிட்டதுபோல் அவர் நடுங்கினுர். கட்டிலண்டை சென்ற அவர், விரைந்தெடுத்தார் அந்த ஓலையை.

"அன்புள்ள முத்துவீரப்பருக்கு,

இறுதி வணக்கம். என்னிடம் பணியாளாயிருந்த நல்லான் எனக்கு மாளாத இழுக்கை உண்டாக்கிவிட்டு ஓடிவிட்டான். நடந்ததை எழுதவும் கை நடுங்குகிறது.

நான் நெடுங்குன்றத்திற்குப்போகிறேன், என் இறுதிப் படுக்கையை விரிக்க.

கண்மணி உங்கள் கண்மணி; காப்பாற்றுங்கள்!

அன்பின்,
குமரன்.

முத்துவீரப்பர் அலறினுர்.

கண்மணி அலமந்து பார்த்துவிட்டுப் பெரியவரோடு போட்டியிட்டாள்!

பெரியவர் அலறல் கேட்டு அண்டை அயலார் ஓடி வந்தனர்.

"எத்தனை நாட்களாயின இந்த வீடு பூட்டி?" என்ருர்.

"நான்கு நாட்களாகிவிட்டன!"

"நான்கு நாட்கள்! நான்கு நாட்கள்!"

அலறினுர்.

"எங்கே நெடுங்குன்றம்?"

கேட்டார்.

வழி சொல்லினர் சிலர்; உடன் போயினர் சிலர். எல்லோரும் அரற்றிக்கொண்டோடினர். தங்க மகனையான் தற்கொலைக்காளானது பெரியவரின் நெஞ்சைக் கிளறிவிட்டுவிட்டது. புலம்பிக்கொண்டோடினர்...

"நெடுங்குன்றமா இது? இல்லை! என் குமரன் உயிர் குடித்த கொடுங்குன்றம்! ஐயோ மகனே! ஆசைகள் ஆயிரம் வைத்திருந்தேனே! அத்தனையும் செத்துப்போகவோ, இத்தனைநாள் வாழ்ந்தேன்? நான் செய்த கொடுமைகளுக்கு, நீ தந்த தண்டனை பற்ருது, மகனே! பற்ருது!" - பிணத்தின்முன் கிடந்தலறினுர்-பெரியவர்.

நெடுங்குன்றத்திலிருந்து செங்குத்தாகக் கீழே விழுந்து தற்கொலைக்காளாகி, கடந்த நான்கு நாட்களாய் காக்கை கழுகுகளின் பசியை ஓரளவு தீர்த்துவிட்டுக் குறையுடலாய்க் கிடந்த அவனை மேலே தூககி வந்தவர்களும் சூழ்ந்து நின்று புலம்பினா. கழுகுகளால் கொத்தப்பட்டுக் கெட்டுப்போன முகம் ஆயிரம் கோரங்களைக் காட்டியது.

யாராலும் யாருக்கும் ஆறுதல் சொல்லமுடியவில்லை.

"தங்கமனதின் சிங்கமைந்தனே! பொங்கு துயரை இங்கே நிறுத்திவிட்டுப் போனதெங்கேயோ? எங்கேயோ? ஐயா, எங்கேயோ?"

-அலறினுர் பெரியவர். அவர் ஓலத்தைக் கேட்ட மலையும் பதிலுக்கு அலறியது; மலை அலறியதைக் கேட்டு மயில் அலறியது; குயில் அலறியது; காடை அலறியது; கழுகும் அலறியது!

யாரும் இல்லை, கண்ணீரைத் துடைக்க.

★

திருமுடிக்காரியாரும் குன்றெறிந்தாரும்நடந்ததை அறிந்துவருந்தினர்.

"குமரன் உங்களைக் காணத் தொண்டிக்குச் சென்றிருக்கலாம என்றல்லவா நினைத்தேன்! ஐயோ, துண்பமே!"

—குன்றெறிந்தார்-கலங்கினுர்.

"உங்களுக்குத் தெரிந்ததை எல்லாம் நீங்கள் ஏன் மறைத்தீர்கள்,

இலங்கைத் தமிழர்கள், கண்ணீர் அருவிகள்!
இனக்கலவரங்களால் அவர்கள் பட்ட அல்லல்கள் ஆயிரமாயிரம்!
இதயம் துடிக்கும் அந்தச் சோக நிகழ்ச்சிகளை வைத்தெழுந்தது இந்தக் காதை!
ஈழத் தமிழர்க்கு நான் வடிக்கும் கண்ணீர்த்துளி, இது!
கதையின் சிறப்புக்கு வழியும் போக்கும் காட்டிய ஆசிரியர்க்கு, நன்றியும் வணக்கமும்!

—மா. பாண்டியன்.

குமரனைக் கொத்தத் துடித்து இத்தனை கழுகுகள் அலைகின்றன என்பதை அன்றே நீங்கள் சொல்லியிருந்தால் நான் மலைக்கோட்டைக்கு அனுப்பியிருக்க மாட்டேனே; மதுரைக்கு அனுப்பியிருப்பேன்! அங்கே அவனை எந்த ஆபத்தும் கொத்தியிருக்க முடியாதே!'' என்றார் காரியார்.

''சிலபல நிலைகளால் நான் உண்மை அத்தனையும் சொல்லமுடியவில்லை. குமரனுக்கு இப்படிக் கோர முடிவு வருமென்று யார்கண்டார்கள்? அவர்கள்தான், அந்த வெறியர்கள்தான் இப்படிப் பொய்யைப் பரப்பியிருக்கின்றனர். அந்த அவமானத்தால்தான் அவன் செத்துவிட்டான் என் ஆசைகள் அனைத்தையும் சூனிய மனதின் சலனங்களாக்கிவிட்டுச் சென்றுவிட்டானே!''

— பெரியவர் அழுதார். தலைக்கு மேல் வெள்ளம்போனபின் அவர் வெள்ளம் பெருக்கெடுத்த கதையைச் சொன்னார்; பயனில்லை.

''ஆ! இனி நாம் என்ன செய்ய வேண்டும்? அதைச் சொல்லுங்கள்!''

காரியார், முத்துவீரப்பருக்கு ஆறுதல் சொல்லும் முறையில் இதைக் கூறினார். பெரியவரின் கலங்கிய உள்ளம் சொல்லும் வழியறியாது திண்டாடியது.

''அன்றிரவு படுக்கப்போகும் நேரத்தில் குமரனின் புரு என் தோட்டத்திற்கு வந்து சேர்ந்தது. நான் விரைந்தோடினேன்; ஓலையை எடுத்துப் படித்தேன். ''உடன் புறப்பட்டு வருக!'' என்ற சொற்கள் மட்டும் இருந்தன. நான் உடன் புறப்பட்டேன். மறுநாள் நன்பகலில் மலைக்குப் போய்ச் சேர்ந்து அவன் மனையை அடைந்து பார்த்தால், இந்தக் கொடுமை. இம்...எனக்கு இப்போது தெரிகிறது. எல்லாம ஏதோ ஒரு சூழ்ச்சியால்தான் நடந்திருக்கின்றன. ஓலையில் இருந்த எழுத்து, வழக்கமான கையெழுத்தாக இல்லை. நடுங்கிய கைகளின் விளையாட்டாக இருந்தது. ஏன் அக்கையெழுத்து அப்படியிருக்க வேண்டும்..? எனவே நான் ஐயுறுகிறேன்!'' என்ற முத்துவீரப்பர், காரியாரையும் குன்றெறிந்தாரையும் அணுகினார்.

★

அலைகள் வரப்போகும் சூறைக் காற்றுக்குக் கட்டியம் கூறிக்கொண்டிருந்தன. கவிந்திருந்த இருள் படகைப் பார்த்துச் சிரித்தது. படகிலிருந்தவர்கள் அனைவரும் சிரித்துக் கும்மாளமடித்துக் கொண்டிருந்தனர். ஆனால் அவன் மட்டும் அசைவு ஏது மற்றுக்கிடந்தான். அவன் விழிகள் வானத்தையே வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தன.

இதே அலைகள் முன்னொரு முறை அவனையும் அவளையும் தூக்கிச் சென்றிருக்கின்றன. அப்போது அவன் அவற்றின் கைகளில் தன்னை மகிழ்ச்சியுடன் ஒப்படைத்துவிட்டான். அந்த அலைகள் தன்னை இன்பக்குடில்நோக்கி இட்டுச் செல்வதாக அவன் மகிழ்ந்தான். அதே அலைகள்விளையாடும்கடல்தான் இப்போதும் அவனை இட்டுச்செல்கின்றன. ஆனால் மகிழ்ச்சி இல்லை! அவன் நினைத்ததற்கு மாறானநிகழ்ச்சிகள் ஒன்றன்பின் ஒன்றாய் நடந்துவிட்டன. இப்போது அவன் இட்டுச் செல்லப்படுவது ஒளி சிதைந்த இருட்டை நோக்கி; இன்பம் துளியுமற்ற இடுகாட்டை நோக்கி!

அன்று அவன் காதலன்; பக்கத்தில் காதலி!

இன்று அவன் பலிக்கிடா; பக்கத்தில் கொலைவாள்கள்! மகிழ்ச்சி எப்படிப் பிறக்கும்?

ஆடிக்காற்றில் அகப்பட்ட காய்ந்த ஓலைபோல் அவன் மனம் சுழற்றிப் புரட்டி எடுக்கப்பட்டது.

சுழன்றான்; அலைந்தான்; புரண்டான்; நைந்தான். துன்பங்களுக்குப் பின்னேதான் அறிவு பிறக்கிறது என்பார்கள். இத்தனை அவலமும் அடைந்தபின்தான் அவன் நெஞ்சில் அறிவுக்கற்றைகள் ஒளிர்ந்தெழுந்தன.

''இனி யாருக்காக நான் வாழ வேண்டும்?''

''யாருக்காகவும் இல்லை!''

''பின் ஏன் நான் இவர்கள் கையில் அகப்பட்டதற்காக வருந்த வேண்டும்?''

''வேண்டவே வேண்டியதில்லை! நீ எதைக் கண்டும் கலங்க வேண்டாம்!''

அவனே கேட்டுக்கொண்டான்; அவனே பதிலும் சொலிக் கொண்டான். அறிவு பிறந்துவிட்டது!

அவர்கள் கையில் அகப்பட்டுக் கொண்டதற்காக அவன் அழவில்லை! சிரித்தான்! அது ''ஞானோதய''த் திருப்பின் ஏற்பட்ட எக்காளம்!

மனம்விட்டுச் சிரித்தான்!
விண்மீன்கள் நகைத்தன!
அலைகள் கைகொட்டின!
அவன் மேலும் சிரித்தான்!
''ஏழை முழங்குகிறான்!
புழு ஆடுகிறது!
ஆம்! கைதி சிரிக்கிறான்!''

–தந்தநாயகேயின் மனம் கொந்தளித்தது.

''பட்டதும் போதாதா? கெட்டதும் போதாதா? சிரிப்பா வேண்டிக் கிடக்கிறது! மூடு வாயை!''

''காற்றுக்கு ஆணையிடுகிறாய்! புனல் ஊற்றுக்குக் கட்டளை விடுகிறாய்! முத்தெறியும் அலைகளுக்கு உத்தரவு போடுகிறாய்!

யாரும் வென்றதில்லை இந்த வீண் முயற்சிகளில். தந்தநாயகேயின் ஆணைகள் மட்டுமா வென்றுவிடப் போகின்றன ஆகாத செயலுக்கு ஆகாயக்கோட்டை கட்டுவது அழகில்லை!''

—கைதி ''ஞானோபதேசம்'' செய்யத் தொடங்கிவிட்டான். தந்தநாயகே செந்தணலானான்:

''ஆயிரமாயிரம் தோல்விகளுக்குப் பின்னும் உன் மனம் ஆர்ப்பாட்டம் செய்கிறது. வேடிக்கை! விந்தையான விளையாட்டு!''

''எனக்குத் தோல்வி என்று நீ தானே சொல்கிறாய்! எத்தனை வெற்றிமணிகள் என் மகுடத்தை அலங்கரிக்கின்றன என்பதை மட்டும் நீ உணரவில்லையே! வருந்துகிறேன்! மிக மிக வருந்துகிறேன்!''

—கைதி எக்காளமிட்டான்.

''கற்பனை வானத்தில் கனவுக் கோட்டையைக் கட்டிக்கொண்ட ஏமாளியே! தந்தநாயகேயின் தீரமும் திறமையும் திசை எட்டுக்கும் தெரியும்! உனக்கு மட்டும் தெரியவில்லை!''

''ஓ! உங்கள் நாட்டில் தீரம், திறமை என்றிரண்டு பெயர்களோ திருட்டுத்தனங்களுக்கு! நல்ல மொழி! நல்ல நாடு!''

''திருட்டுத்தனம் என்று எளிதில் சொல்லிவிட்டாய்! ஆனால் அந்தத் திருட்டுத்தனத்தால்தான் உன் திட்டங்களை எளிதில்அறிந்துகொள்ள முடிந்தது; அந்தத் திருட்டுத்தனம் இருந்ததால்தான், உன் செய்தி தாங்கிவந்த புருவை உடன் களவாட முடிந்தது; முத்துவீரப்பர் உனக்கு உதவ வருவதைத் தடுக்கமுடிந்தது. அந்தக் களவுத்தனம் இருந்ததால்தான் உன் கையெழுத்துப்போல் எழுதி முத்துவீரப்பரை அலைக்கழிக்க முடிந்தது. பாவம்! இந்நேரம் அவர் நெடுங்குன்றத்தில் 'உனது' பிணத்தின் அருகில் நின்று அரற்றி விழுந்து புலம்புவார். பாவம்! நமது அனுதாபம் அவருக்கு உரித்தாகுக. இன்னும் சொன்னால் இந்தக் கொமதி என்னிடம் இருப்பதால்தான் முத்துவீரப்பர் நீ தற்கொலை செய்து கொண்டுவிட்டதாக நம்பிப் புலம்புகிறார்!

இப்போது தெரிந்ததா களவும் மோசடியும் என் கடமைகளுக்கு எவ்வளவு தொலைவு கை கொடுக்கின்றன என்பது?

இம்...ம்...அதை அறியும் திறமை இருந்தால் நீ ஏன் அவ்வளவு தொலை ஆர்ப்பரிக்கப்போகிறாய்?''

தந்தநாயகே கொக்கரித்தான். கைதிக்குத் திடீரென்று வந்த ஞானம் திடீரென்றே போய் விட்டது!

★

குணதிலகே வாசனை அருவியில் குளித்துக்கொண்டிருந்தான்.

மானும் மயிலும் மஞ்சள் தடவிக் கொள்வதில்லை; குஞ்சம்கட்டிக்கொள்வதில்லை; சந்தனத்தின்பக்கம் போவதுமில்லை; பட்டாடையை எண்ணியதுமில்லை. ஆனால் ''அவற்றின் அழகத்தனையும் குடியிருக்கும் பெண்ணே!'' என்கிறோம். அந்தப் பெண்ணே அலங்காரத்தை நாடுகிறாள். விழி அஞ்சனமும் முகமஞ்சளும், குழல் தைலமும் மணப்பொடியும் பெண்ணுக்குத் தேவைப்படுகின்றன. என்றால் ஆண் அவற்றை எல்லாம் நாடுவதில் விந்தையில்லையே! அதிலும் குணதிலகே அவற்றை நாடுவதில் வேடிக்கையில்லை!

இன்னும் அரைநாள் பயணம் அவனுக்கு இருக்கிறது. அவன் நெஞ்சம் தனக்காக அமரசேனே ஏற்பாடு செய்திருக்கும் வரவேற்புக் காட்சிகளைக் கற்பனைக் கண்ணால் பார்த்துக்கொண்டது. அவனது திருமணம் அறுவடை என்றால், 'அறுவடைக்கு எல்லாம் தயார்!' என்ற பசிய காட்சிகளைக் காட்டும் விளைந்த வயலாகக் கருதினான், வரவேற்பு ஏற்பாடுகளை.

அலங்காரங்களை முடித்துக் கொண்டு வெளியேறினான். தேரில் ஏறி உட்கார்ந்தபின் தன்னையே ஒரு முறை பார்த்துக்கொண்டான்.

''அமரசேனே நகர் எல்லையில் காத்திருப்பான்! விரட்டு விரைவாக!''

கட்டளை பிறந்தது; புரவிகள் பறந்தன!

★

மகரதோரணங்களும் கமுகு வாழைகளும் ஆடிக்கொண்டிருந்தன, இளங்காற்றில் ஒளிக்காதலனைக் கண்டு வெட்கித் தலைகுனிந்து தரையை நோக்கிக்கொண்டிருந்தன வாழைமரங்கள்.

அத்தனையும் பொன் மயமான உலகைப் படைக்கத் துடிப்பனபோல் காட்சியளித்தன.

வண்ணம் பொலிந்து நிற்கும் கோட்டை வாயிலருகே அமரசேனே, வெற்றிப் பெருமிதத்துடன் நின்றான். அவன் மனம் இன்பக் கூத்தாடியது; இதழ் தயாரித்து வைத்திருந்த வரவேற்பு மொழிகளைச் சொல்லிப் பார்த்துக்கொண்டது.

''கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும் என்று பெரியவர்கள் சொன்னது பொய்யாகவில்லை. எத்தனை அடம்பிடித்தாள்! எவ்வளவு முரண்டு பண்ணினாள்! ஆர்ப்பாட்டத்தின் உச்சி முடிக்கே சென்றாள்! ஆனால் அத்தனையும்...என்ன இருந்தாலும் அண்ணன் என்ற பாசம் இராதா? அப்பாடா...ஒரு வழியாகக் கவலை ஓய்ந்தது! இனி, குணதிலகே என் அத்தான்; இந்த ஈழத்தின் பரந்த ஒரு பகுதி என் நாடு! ஆகா...!''

இன்ப அலைகள் புரண்டால் மனம் அடக்கிக்கொள்ள முடியாது திண்டாடும். எதுவுமே ஒரு சீராய் இல்லாவிட்டால் இந்தத் தொல்லைதான். அமரசேனே அடக்க முடியாத உணர்ச்சிகளால் உந்தப்பட்டு, பக்கத்தில் நின்ற காவலாளின் தோளைத் தட்டிக் கொடுத்தான். அக்காவலாளி அமரசேனேயின் ''ஆனந்த''த்தைத் தாங்கமுடியாது, தோளைத் தடவி விட்டுக்கொண்டான்.

தொலைவில் குதிரைகள் வரும் ஒலியைக் கேட்டான் அவன். விரைந்தோடினான் வாசலுக்கு. ''எடு மாலைகளை! ஏ! நீ அங்கே நில்! வாத்தியங்களைத் தயாராக்குங்கள்!'' என்று கட்டளைகளைப் பிறப்பித்தான். தன் ஆடைகளையும் வாளையும் சரிப்படுத்திக்கொண்டான்.

முன்னே நான்கைந்து குதிரைகள் வந்தன; பின்னே ஒரு தேர் வந்தது. கொம்புகள் ஊதின; முரசுகள் முழங்கின; ஒரே ஆரவாரம்!

கைகூப்பி வரவேற்பதற்குத் தயாராய் நின்ற அமரசேனே திடீரென ''நிறுத்துங்கள்!'' என்பவன்போலக் கையை உதறினான். முழங்கிய மின்வெட்டு திடீரென நிற்பதுபோல அத்தனை வாத்தியங்களும் திடீரென நின்றன பறந்து வந்த குதிரைகளை விரைந்து போகச்சொல்லிக்கையைக் காட்டினான். பின்னர் வந்த தேரையும் விரைந்து போகச் சொன்னான். தேரின் முன் பக்கத்தில் அமர்ந்திருந்த தந்தநாயகே, ''வெற்றி!'' என்று கூவினான். அமரசேனே ''விடு அரண்மனைக்கு!'' என்றான். தன் குதிரையிலேறியவாறே கோட்டைக் காவலாளியிடம் அமரசேனே சொன்னான்: ''குணதிலகே வருவது தெரிந்ததும் அரண்மனைக்கு ஆளனுப்பு!''

அரண்மனையில் கொள்ளைக் கூட்டம் நுழைவதுபோல், அத்தனை குதிரைகளும் புரண்டடித்துக் கொண்டு போய் நின்றன. புழுதி அடங்குவதற்குள், தேரிலிருந்த குமரன் தூக்கிச் செல்லப்பட்டான், அமரசேனேயின் அறைக்கு. கட்டுக்கள் அவிழ்த்து விடப்பட்டும் தளர்ந்த நிலையில் நின்றான். ஏதோ ஒரு தீய கனவைக் கண்டு முடித்து விழித்தவன்போல் அவன் மயங்கி நின்றான.

''மருகராக வர வேண்டிய இடத்திற்குக் கைதியாக அழைத்து வரப்பட்டிருக்கிறீர்! மனம் சங்கடப்படத்தான் செய்யும்! இல்லையா, அத்தான்!''

அமரசேனே கிண்டல் செய்தான். அரண்மனைக்குள் நுழைந்ததுமே பழைய நினைவுகளால் உலுக்கப்பட்டு மதி மாண்டு நின்ற குமரன் காதில இது விழுந்ததாகவே தெரியவில்லை.

''அத்தானுக்கு மெத்தக் கோபம் போலும்! உரிய வரவேற்பைத் தர வேண்டாமா!'' என்றவாறே குமரனின் கன்னத்தில் மாறி மாறி அறைந்தான் அமரசேனே.

குமரன் சிலையாகவே நின்றான். கூடி விளையாடிய காதலியின் நினைவுகளைச் சேகரித்துக்கொண்டிருந்தது இதயம். அமரசேனே பேசிய எதையும் கேட்காது, அவன் மனம் அலைந்துகொண்டே இருந்தது!

காலம் பறப்பதைக் கண்ட அமரசேனே திட்டத்தை விரைவில் முடிக்க நினைத்துக குமரனை நெருங்கினான்.

''ஆசை அத்தானே! என் தங்கை இளவரசி சோமாவதி எனக்குத் தேவை! எங்கே, உங்கள் இதயத்தைக் காட்டுங்கள்! அதைத் திறந்து அவளை எடுத்துக்கொள்கிறேன்!'' என்றவாறே வாளுடன் குமரனை நெருங்கிய அமரசேனே வானத்தி...

— 8-ம் பக்கம் —

நூல் நயம்

— செல்லையா —

திராவிட நாடு திராவிடருக்கே

ஆசிரியர் :
திராவிடப்பித்தன்.

"சோறு தேவை!"-ஏழை கேட்கிறான்.

"ஏன் வேண்டும்?"-இப்படி கேட்பாரில்லை; உண்டு! அல்லது இல்லை என்ற பதில்தான் வரும்.

"துணி கொடு!" என்கிறான் மனிதன்.

"ஏன் வேண்டும் துணி?"-இப்படிக் கேட்பாரில்லை; இருக்கிறது அல்லது இல்லை என்ற பதில்தான் வரும்!

ஆனால் ஒரு கொடுமை...!

"விடுதலை வேண்டும்!"-திராவிடரின் முழக்கம் இது!

"விடுதலையா? ஏன் வேண்டும் எதற்கு வேண்டும்? எப்படி வேண்டும்? அது எங்குக் கிடைக்கும்?" -இப்படி விந்தை வினாக்கள் இந்த இடத்தில் மட்டும்! சோறு கேட்கிறான் வயிறை நிரப்ப என்பதை அறிந்துகொண்டோர், துணி கேட்கிறான் மானத்தைக் காக்க என்பதைப் புரிந்துகொண்டோர், விடுதலை கேட்கிறான் உரிமையை நிலைநாட்ட என்பதை மட்டும் புரிந்துகொள்ளவில்லை!

ஆமாம்! ஆணவக்கோட்டை கட்டியுள்ள ஆதிக்க மனப்பான்மைக்காரர்களுக்கு இது மட்டும் புரிவதில்லை!

"திராவிட நாடு திராவிடருக்கே"

அணி அணியாய் எழுந்து நிற்கும் மறவர்கள் ஆண்டாண்டாய் எழுப்பும் இக்குரல் வடக்கருக்கும் புரியவில்லை; அவர்களுக்கு வால் பிடிக்கும் தரகர்களுக்கும் புரியவில்லை.

பல்கலையும் பல நூலும் வளர்த்தவர்களின் விடுதலை முழக்கத்தின் பொருள், புரியவில்லை!

கட்டைவிரலைப் புரட்டும் புத்திசாலிகள் அரசுக்கட்டிலேறும் நாடுதானே இது! அதனால்தான் நாம் நம் முழக்கத்தின் முழுப் பொருளையும் தெளிவாகத் தொகுத்து வைக்க வேண்டியிருக்கிறது!

நம்மில் ஒருவரான தோழர் திராவிடப்பித்தன் அந்தக் கடமையைச் செய்திருக்கிறார். பல ஆண்டுகள் உழைத்து உழைத்து அவர் தேடி அறிந்த வலிய கருத்துக்களை எல்லாம் சில ஆண்டுகளுக்கு முன்னர் "திராவிட"னில் தொடர்ந்து எழுதி வந்தார். விடுதலைப் படையினர் அத் தொடர்கட்டுரையை வெகுவாகச் சுவைத்தனர். அதுவே இப்போது அழகாக, என்னுளுக்கும் பயன் தருவதாக, நூல் வடிவில் வெளியிடப் பெற்றுள்ளது.

திராவிடநாட்டு விடுதலைக்கான காரணங்கள் பல்வேறு இயல்களையும் துறைகளையும் பொறுத்து வகுத்து வலியுறுத்தப்படுகின்றன. அவற்றுள் மொழியியலைப் பொறுத்த காரணங்கள் இந்நூலில் வலியுறுத்தப்படுகின்றன; விளக்கப்படுகின்றன. ஆசிரியத்தோழர் தாம் எடுத்துக் கொண்ட பொருளுக்கு ஆதரவாக அன்றிலிருந்து இன்றுவரை சொல்லப்பட்ட கருத்துக்களை எடுத்துக்காட்டியிருக்கிறார்.

"திராவிட நாடு காணும் பெருநாளே தென்னிந்தியர் யாவருக்கும் ஒரு திருநாளாகும்!" என்று அன்று நிலக்கோட்டை மாநாட்டில் திரு. வி. க. சொன்னது முதல் இன்று அண்ணா சொன்ன கருத்துக்கள் வரை தொகுக்கப்பட்டுள்ளன.

ஃ ஃ ஃ

கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையாளமும் கன்னித்தமிழும் ஒரே குடும்ப மொழிகள் என்பதை எவர் மறுத்தாலும் ஆசிரியர் அவை அனைத்தும் ஒன்றே என்பதைச் சிறு சிறு எடுத்துக்காட்டுக்களால் நிலைநாட்டியுள்ளார்.

"மரம் என்ற ஒரு பொருளுக்குத் தமிழில் மரம் என்ற பெயரும் ஆங்கிலத்தில் ட்ரீ என்ற வேறு பெயரும் இந்தியில் பேட் என்ற மற்றொரு பெயருமாக இருப்பதால், இம்மொழிகளை வெவ்வேறு மொழிகள் என்றும், வெவ்வேறு மொழிக் குடும்பத்தைச் சார்ந்தது என்றும், வெவ்வேறு மொழி இனத்தைச் சேர்ந்தது என்றும் கூறுகிறோம். ஆனால் மரம் என்ற பொருளுக்குத் தெலுங்கில் ம்ரானு என்ற பெயரும், கன்னடத்தில் மரவு என்ற பெயரும், துளுவில் மர என்ற பெயரும் இருக்கின்றனவே தவிர, ஆங்கிலம, இந்தி மொழிகளில் உள்ளது போன்று வேறு வேறு பெயர்கள் இருந்து வரவில்லை!"

இப்படியே, தமிழில் உள்ள தலை நம் குடும்ப மொழிகளில் தல, தலெ என்று வழங்கப்பெறுவதையும், ஆசிரியத் தோழர் அங்கங்கே விளக்கியுள்ளார்கள்.

எடுத்துக் காட்டுகள், உண்மையான வாதத்திற்கு எண்ணற்றன கிடைக்கும் என்பதை உணர்ந்து, அத்தனையையும் தேடித் தொகுத்துத் தந்திருக்கிறார் ஆசிரியத் தோழர். திராவிடம் என்ற சொல் எங்கெங்கே வெளி மொழிகளில் பயன்படுத்தப் பட்டிருக்கின்றது என்பதை இப்படிக் குறிக்கிறார் அவர் :

"பக்கிம் சந்திரர் திராவிடர் என்கிறார். ரவீந்திரர் திராவிடர் எனப்புகழ்கின்றார். லோகமான்ய திலகர் தொல்புகழ் திராவிடர் எனக் கூறுகின்றார். காந்தி மகாத்மா திராவிட மொழிகள் பேசும் திராவிடர் என்று பேசியும் எழுதியும் வருகிறார். பண்டித நேருவும் திராவிட இனத்தவர் என்றே கூறுகிறார். இதையேதான் நாள் தோறும் ரேடியோ பாரத மாதாவும் கூறுகின்றாள்."

ஒவ்வொரு சிறு சேதிக்குக்கூட இவர் எடுத்துக்கொண்டுள்ள முயற்சி, நமக்கு நெடுங் காலத்திற்கு உதவும் கருத்துச் செல்வங்களைத் தந்திருக்கிறது. அவை வரலாறு. இலக்கியம், இலக்கணம், வழிப்போக்கர் குறிப்பு, கல்வெட்டுக்கள் முதலிய அனைத்தினின்றும் தொகுக்கப்பட்டிருக்கின்றன. இவையெல்லாம் தேவையன்றோ ஒரு பழஞ் சேதியை நிலைநாட்டுவதென்றால்?

நூலின் சிறப்பை வகுப்பவற்றுள், சொல்லும் முறையின் வெற்றியும் ஒன்றாகும். ஆசிரியத் தோழர் எளிய இனிய நடையில், மிகக் கடினமான சேதிகளைக்கூடத் தொகுத்துத் தந்திருப்பது பாராட்டற்குரியதே! கையிலெடுக்கும் கழகத் தோழர்களும் சரி; மாற்று இயக்கத்தினரும் சரி; நூலை முடிக்காமல் கீழே வைக்கமாட்டார்கள்.

மொத்தத்தில்...

மதிப்புரை எழுதியுள்ள பொதுச் செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் "திராவிட இன மொழிக் குடும்பத்தின் ஒற்றுமை பற்றி ஐயுறுவோர்க்கு இந்நூல் தக்க விடையிறுப்பதாக "அமைவதாகும்!" என்று குறிப்பிட்டுள்ளதை சஞ்சீவி ரெட்டியாருக்கும் அவர் சந்ததியார்க்கும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். ஏனென்றால் அவர்களும் இப்போது "திராவிடநாடு என்றால் எமக்கு விளங்கவில்லை!" என்று சொல்லத் தொடங்கிவிட்டார்களே!

வெளியிட்டோர் :

தமிழ் நூற்பதிப்புக் கழகம்,
203, தங்கசாலை, சென்னை-1.
விலை ரூ. 2.

★

ஐ. நா. சபைத் தீர்ப்பு :

திராவிட நாடு திராவிடருக்கே

ஆசிரியர்:
மு. கணபதி.

திராவிட நாட்டுப் பிரச்னையை உலகத்தார் அனைவரும் உணரும் படியான நிலை ஏற்பட, இப்பிரச்னையை ஐ நா. சபைக்குக்கூடக் கொண்டு செல்லலாம் என்பதாக அண்ணா பேசியதாக நினைவு. அப்படிக் கொண்டு போனால் எப்படி வாதம் நடக்கும்? என்ன தீர்ப்பு வரும்? இந்நூலில் அதற்கான விடைகள் கிடைக்கும், நாடக உருவில்.

விலை குறைவாயிருந்தால் எல்லோரும் வாங்கிப் படிக்க வியலும்.

வெளியிட்டோர் :

மதிநூல் நிலையம்,
8/8-பி, செந்தண்ணீர்புரம்,
பொன்மலை, திருச்சி-4.
விலை ரூ. 1-25.

மறைமலையடிகள் ஆராய்ச்சிக் குழு

5-ம் கூட்டம்

இடம் : தொண்டமண்டலத் துளுவவேளாளர் உயர்நிலைப் பள்ளி, சென்னை.

காலம் : 25-4-60 திங்கள் மாலை 6-15 மணிக்கு.

தலைவர் : உயர்திரு. இராவ்சாகிப் நல் முருகேசர் பி. ஏ.

சொற்பொழிவாளர் : உயர்திரு பேராசிரியர் டாக்டர் யு. ஆர். பாரன்வான் எக்ரான்பெல்சு அவர்கள் (மானிடவியல் ஆராய்ச்சித்துறைத் தலைவர், பல்கலைக்கழகம், சென்னை.)

பொருள் : "வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட தென்னிந்தியா" (சொற்பொழிவு ஆங்கிலத்தில் நடைபெறும். திரு ஊ. செயராமன் தமிழில் மொழி பெயர்ப்பார்.)

— 7-ம் பக்கத் தொடர்ச்சி—

பறந்தான், உறங்கிக் கிடந்த புலி விழித்துக்கொண்டது.

குமரன் "சோமா!" என்று ஒரே குரலில் கத்திக்கொண்டு ஓடினான்

தடுக்க முனைந்த தந்தநாயகே, நிலைகுலைந்து வீழ்ந்தான்.

கண்மூடிக் கண் திறப்பதற்குள் குமரனின் கையில் சோமாவதி கிடந்தாள். அவன் நெஞ்சும் இவள் தோளும் நனைந்தன.

"கண்ணே சோமா! நீ இன்னும் இருக்கிறாயா? இறந்துவிட்டாய் என்றெண்ணி இவர்கள் கையில் இறக்கவும் தயாராகிவிட்டேனே! ஐயோ! சற்றுத் தப்பியிருந்தால், என் பிணத்தைத்தான் கண்டிருப்பாய். நீயும் உண்மையாகவே பிணமாகியிருப்பாய்! எப்படிக் கண்ணே, நீ பிழைத்தாய்? ஐயோ! சோமா! சோமா!"

குமரன் கண்ணீர் மழை நிற்கவில்லை. சோமா எதுவும் பேச ஆற்றலற்று நிலையாக நின்றாள்.

வான் நோக்கிப் பறந்த அமரனுக்கு, விட்டம் வழிவிடாததால் தரையை முத்தமிட்டான். எழவும் ஆற்றலற்றுக் கிடந்தான். தந்தநாயகே அடிமேல் அடி எடுத்து வைத்து, குமரனை நெருங்கினான். மற்றவர்களும் நெருங்கினர்.

சாவை மானத்தோடு தழுவ நினைத்த குமரன் தயாரானான்.

"கண்ணே! நம் கண்மணி தொண்டியில் முத்துவீரப்பர் என்பவரிடம் இருக்கிறாள்!" என்று சொல்லிவிட்டு, சுவரில் இருந்த வாளொன்றை எடுத்துத் தயாரானான்.

அரை நாழிகைக்குமேல் நீடித்தது போர். காவல் படையை அழைத்தால் செய்தி வெளியாகிவிடும். அதனால் அதை அழைக்க வேண்டாமென்று தடுத்துவிட்டான் குமரன். இருந்த ஆறு பேரும் ஒரே ஒரு மனிதனை குமரன் மேல் பாய்ந்தனர். பூந்தொட்டிகள் நொறுங்கின. திரைச் சீலைகள் கிழிந்தன. இருக்கைகள் உடைந்தன. சோமா திகைத்து நின்றாள், நெஞ்சைப் பிடித்துக்கொண்டு.

காற்றினும் கடுகிச் சுழன்ற ஆற்றல் மறவன் குமரன், தந்தநாயகேயையும் அவன் ஆட்களையும் வீழ்த்திவிட்டான். வெறி வேங்கைபோல் பாய்ந்த அமரசேனே குமரனை அலைக்கழித்தான். இறுதியில் அமரசேனேயும், குமரனின் வாளைத் தாங்கினான். அவன் நெஞ்சில் பாய்ந்த வாளை எடுத்து உடைத்தெறிந்தான், குமரன்.

"என்னை மன்னித்துவிடு சோமா!" என்றவன் உயிருக்குப் போராடும் அமரசேனேயை நெருங்கி "அமரா! உன்னைத் தாக்கியதற்காக நான் வருந்துகிறேன். ஆனால் என்னிலையில் வேறு வழியே இல்லை. நீயே அறிவாய், தொல்லைக்களானல்புழுகூடப் போரிடும் என்று! நீ என்னைக் கிண்டலாக அத்தான் என்றழைத்தாலும், நான் என் அன்பை எல்லாம் கொட்டி உன்னை 'மைத்துனனே!' என்றழைக்கிறேன். மைத்துனனே! மன்னித்துவிடு!" என்றான்.

அமரன் கைகளை உயர்த்திக் குமரனின் கன்னத்தைத் தடவி "அத்தான்!" என்று அழைத்தான். அந்தக் குரலும் அவன் உயிரும் ஒரே நேரத்தில் அடங்கின.

விழிகளில் துளிர்ந்த நீரைத் துடைத்துவிட்டு எழுந்தான், குமரன்.

— 12-ம் பக்கம் —

சாவாய் தமிழா!

சாக்கடையில் நெளிகின்ற புழுவாய், வாழ்வுச்
சாக்கடையில் நெளிகின்றாய்; அழுந்து கின்றாய்;
நாக்குலைந்து நரம்புகளின் உணர்வி ழந்து
நாதியற்ற பிணம்போலப் புரளு கின்றாய்;
நீக்கமற நிறைந்துள்ள மடமை யென்னும்
நிறைசேற்றில் சிக்கிக்கொண் டுழலு கின்றாய்
போக்கிடத்தை யறியாமல் முன்னும் பின்னும்
போகின்றாய் வருகின்றாய் குறிக்கோ ளின்றி

பாராண்ட இனமென்னும் உணர்ச்சி யில்லை
பண்பட்ட இனமக்கள் தோன்றல் என்ற
சீராரும் நல்லெண்ணம் மனத்தில் இல்லை
சீர்குலைந்து பேர்குலைந்து வாழு கின்றாய்
போராற்றல் படைத்திட்ட பரம்ப ரையின்
பெயருக்கே களங்கத்தைக் கற்பிக் கின்றாய்
நீரற்ற தாமரையாய்ப் பொலிவி ழந்து
நீளுலகில் வாழ்கின்றாய் வயிற்றுக் காக.

மொழியுணர்ச்சி உனக்கில்லை, மொழியைக் காக்க
முந்துகிற ஆற்றலினை இழந்து விட்டாய்;
விழியிருந்தும் குருடன்போல் வாழு கின்றாய்
வெற்றுரையைப் பேசுகிறாய்; வீணாய்க் காலம்
கழிக்கின்றாய்; உன்னினத்தை மாற்றா னுக்குக்
காட்டிக்கொ டுக்கின்றாய்; வெட்க மில்லை!
பழிக்கின்ற மாற்றானின் அடியில் வீழ்ந்து
பாதத்தை நக்குகிறாய்; பணிசெய் கின்றாய்!

அடிமையெனும் உணர்வில்லை; தமிழர் நாடு
அந்நியரின் கரங்களிலே சிக்கிக் கொண்டு
துடிக்கின்ற காட்சியினைக் கண்டும் நெஞ்சம்
துடிக்கின்ற உணர்ச்சியுனக் கில்லை; நீயோ
அடிபட்ட பூனைபோல் அடுக்க ளையில்
அரற்றிக்கொண் டிருக்கின்றாய்; மாற்றான் ஆட்சி
குடித்துக்கொண் டிருக்கிற துயிரை; ஆனால்
குலவிக்கொண் டவன்காலைப் பிடிக்கின் றாய்நீ.

மானம்போய் உயிர்வாழ்தல் மடமை யென்ற
மாண்புக்கோர் எடுத்துக்காட் டாக நின்றாய்
ஊனுயிரை வளர்த்தற்கோர் வேடம் தாங்கி
உலவுகிறாய் நீஇன்று தமிழர் நாட்டில்!
தானாக வளர்ந்திட்ட உணர்வா? இல்லை
தரங்கெட்ட அந்நியரின் பாதந் தன்னை
நீநம்பி வாழ்ந்ததனால் விளைந்த தொன்றா?
நில்லிதனை உரைத்திட்டுப் போவாய் பின்னே!

இத்தகைய வாழ்க்கையினை வாழ்ந்து நாட்டில்
இழிச்சொல்லும் பழிச்சொல்லும் ஏற்ப தாயின்
செத்தொழிதல் மேலென்று கூறு கின்றேன்
செந்தமிழா நடைப்பிணமாய் வாழ்நதி டாதே!
எத்திறமும் பெற்றவன்நீ இதைம றந்தே
ஈசல்போல் வாழ்கின்றாய்! வேண்டாம்! வேண்டாம்!
கைத்திறத்தைக் காட்டிடுவாய்! முடியா விட்டால்
காலத்தைத் தாழ்த்தாமல் தமிழா சாவாய்!

—துறையூர் ந. அலி. பி. ஏ.

நன்கொடை!

தருமத்திற்கு மற்றொரு நளினமான பெயர்தான் நன்கொடை!

இல்லாதவனுக்கு இருப்பவன் பலனை எதிர்பாராது கொடுக்கும் ஒரு செயல் நல்லதுக்கும் இது பயன்படலாம்; அல்லதுக்கும் பயன் படலாம். கொடுப்பவனைப் பொறுத்தும் வாங்குபவனைப் பொறுத்தும் அமைந்துள்ளது

இது இப்பொழுதுதான் ஏற்பட்டதா?...இல்லை. எப்பொழுதோ ஏற்பட்டது. வாரி வழங்கிய பாரி-கொடுத்துச் சிவந்த குமணன்-செத்தும் கொடுத்த சீதக்காதி-இப்படி எத்தனையோ பேர். இருந்து இறந்தவர்கள்-உடலளவில்! இறந்தும் இருப்பவர்கள் பெயரளவில்!!

அதைப் பற்றி இப்பொழுதென்ன?...உண்டு. சில காலமாக ஏடுகளில் நன்கொடைப் பட்டியலைக் கொட்டை எழுத்துக்களில் அடிக்கடி கண்டு வருகிறோம். நட்சத்திரங்கள் முதல் நாடாள்வோர் வரை இதில் பங்கேற்கின்றனர். ஒருபுறம் மகிழ்ச்சி-மறுபுறம் சிந்தனை.

ஏன்...? தருமம் செய்யும் பழக்கம் தொன்றுதொட்டு நம் நாட்டில் இருந்துவரும் ஒன்று. ஆனாலும் தற்போதுதான் இது சுவையான கட்டத்தை நெருங்கியிருக்கிறது.

"கொடுப்பவன் இருப்பதால் வாங்குபவன் வளைகிறானா? அல்லது வாங்குபவன் வளைவதால் கொடுப்பவன் நெகிழ்கிறானா?" -இது கேள்வி.

"இருவரும் ஒருவரை ஒருவர் தழுவிக்கொண்ட பின்னலே அது!"-இது எனது பதில்

இப்போது இது வேண்டாம் நமக்கு.

"வலது கை கொடுப்பதை இடது கைக்குத் தெரியாமல் கொடு"-இது தருமத்தின் தத்துவம்; உண்மை.

ஆனால் நடப்பது ...?

இடதுகைக்குத் தெரிந்துதான் வலதுகை கொடுக்கவேண்டிய நிலை ...!

இது இருக்கலாமா? கூடாதுதான்-வேறு வழி?

சிந்தித்துப் பார்ப்போம்.

"தருமம் தலைகாக்கும்"-இது நெறி.

'தனக்கு மிஞ்சித்தான் தான தருமம்"-இது வாழ்க்கை. ஒத்துக் கொள்ளலாம். ஆனால் தருமத்தின் கதி...?

"உனக்கு மிஞ்சுவதெப்போது-பேராசை மீறி, உவந்தளிப்ப தெப்போது...?"

எனவே ஒன்று செய்யலாம் உனக்குள்ள பாகத்தில் ஒரு சிறு பொருளை உவந்தளிப்பாய் இல்லாத வறியர் நோக்கி ...!

இப்போது தருமம் ஓரளவு பிழைக்கலாம்!

ஆனால் அப்படிக் கொடுக்கப்படும் பொருள் எந்தச் சூழ் நிலையில்-எந்த விதத்தில் கொடுக்கப்படுகிறது? கொட்டு முழக கோடும் பட்டம் பதவியோடும் தருமம் பல்லை இளித்துக்கொண்டு பவனி வருகிறது.

'ஏழைகளுக்கு வாரிக் கொடுத்த ஏந்தல்."

"குடிசைகள் போட்டுக் கொடுத்த கோமான்."

"பாரிக்குப்பின் பாரில் பிறந்த வள்ளல்".... இப்படிப் பத்திரிகைத் தலைப்புகள்-படிப்பவர் பேச்சுக்கள்-இது மிகையல்ல-உண்மை! இல்லையா?

இதை எதிர்பார்த்துத்தான் கொடுப்பவர் கொடுக்கிறார். அதை உணர்ந்தே வாங்குபவரும் வாழ்த்திப் புகழ்கிறார்.

பத்துப்பேர் கூடியுள்ள ஒரு பொது இடத்தில் ஒருவன் பிச்சை கேட்டால்கூட அவனுக்கு உதவும் எண்ணத்துடன் பிறர் தருமம் கொடுப்பதில்லை. தான் கொடுப்பதை மற்றவர்கள் பார்க்கிறார்களா என்ற பெருமிதத்துடன் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டு, போலி கௌரவம் முகத்தில் வழியப் பிச்சையைப் போடுகிறார்கள். இது தற்போது சாதாரணமாக நடந்துவருவது; மனித இயல்பு. போலி கௌரவத்திற்கும் புகழுக்கும் அடிமைப்பட்ட மனிதன் இப்படித்தான் செய்கிறான். ஏனெனில அவன மனிதன் ...!

"ஐயமிட்டுண்" என்று ஒரு அடி முரசு கொட்டுகிறது.

"ஏற்பது இகழ்ச்சி" என்று அடுத்த அடி கிண்டல் செய்து கை தட்டுகிறது! இது ஏன்?

இருப்பவன் இல்லாதவனுக்குக் கொடுத்து உதவும் பரந்த மனப்பான்மை கொண்டவனாக இருக்கவேண்டும என்பதை முதல் அடி பறைசாற்றுகிறது. ஆனால், "ஏந்திப் பிழைப்பதைத் தொழி லாகக் கொண்டு, உடலை வளைக்காமல் வயிறு வளர்ப்பதை கேவல மாகக் கொள்" என்று மறு அடி முறையிடுகிறது.

எனவே பிச்சை எடுக்க வேண்டிய நிலையில் இருப்பவன் "ஏற்பது இகழ்ச்சி" என்ற எழுத்தால் தானாக வாழ முனைகிறான். வளமும் வசதியும் உள்ளவன் 'ஐயமிட்டுண்" என்ற வார்த்தையால் வழியற்றவனுக்கு உதவும் எண்ணத்தைக் கடைப்பிடிக்க முயல் கிறான்.

எனவே இதிலிருந்து தருமம் தலையெடுக்க ஆரம்பிக்கிறது. மாறாகத் தம்பட்டம அடிக்க அல்ல...!

நேர்மை உணர்ச்சியோடு - நன்கொடை எண்ணத்தோடு - புகழை விரும்பாமல், இன்னார் கொடுத்தது என்று பிறர் அறியாமல் எவராவது செய்ய முன்வரட்டும். பார்ப்போம்! அப்போதுதான் அது உண்மையான தருமம் எனக் கருதப்படும்.

அதுவரை அப்படி இல்லாமல் செயயப்படும் செயல்கள் யாவும் தருமம் என்றோ, நன்கொடை என்றோ கருதப்பட முடியாது. அவை எல்லாம் புகழை விரும்பி, முகத்துதிக்கு அடிமைப்பட்டு-பெருமைக் காகக் கொடுக்கப்படும் தரகு; அல்லது இலஞ்சம்; அல்லது கைக்கூலி என்றுதான் கருதப்படும்-என் வரையில்!

—அவினசிமணி.

கண்டனம் பாரும் இன்று !

கன்னடம் கவசம் பூணும் நாளை !

"தமிழகத்தில் மட்டும்தான் இந்திக்கு எதிர்ப்பிருக்கிறது. அதுகூடப் பிரிவினைபுத்தி கொண்ட சிலரால் வலிவற்ற குரலில் கிளப்பப்படும் முணகல் தான்" என்றுவடநாட்டு எதேச்சாதிகார அரசும், அதற்கு அடிபுதையரணம் துடைக்கும் சென்னைக் காங்கிரசும் அமைச்சரவையும் கூறிவருகின்றன. முதுகிலே எலும்பில்லாத, தன்மான உணர்ச்சியற்ற, பதவிப்பித்துக் கொண்டஅமைச்சர்கள் "முழுப்பூசணிக் காயைச் சோற்றில் மறைக்க முயலும்" மேதாவிகள்போல உளறிவருகின்றனர். "இந்திக்கு எதிர்ப்பு தி. மு. க. தான் தெரிவிக்கிறது, அதுகூட தமிழ்நாட்டில் இருக்கும் சாதாரண, செல்வாக்கற்ற கூக்குரலாக இருக்கிறது !" என்றும் சொல்லித் தங்கள் "எசமான விசுவாச"த்தைக் காட்டிக்கொள்கின்றனர்.

ஆனால், அந்த அப்பாவிகள் "தமிழகம் மட்டுமல்ல; திராவிடத்தின் மற்ற பகுதிகளான கேரளம், ஆந்திரம், கன்னடம் ஆகியவையும் இந்தியை எதிர்க்கின்றன ! வேண்டாம் அந்த நஞ்சு கக்கும் மொழி என்று முழங்குகின்றன !" என்பது தெரிந்தும் தெரியாததுபோல் காட்டிக்கொள்கின்றனர்.

வஞ்சக வடவராட்சிக்கு எந்தெந்த முறையில் எதிர்க்குரல் எழுப்ப இயலுமோ அந்தந்த முறையில் எதிர்க்குரல் எழுப்பித்தான் வருகிறது கருநாடகம்.

மொழித்துறையில் வடவராதிக்கம் செய்துவரும் வஞ்சனையை, இந்தி மொழியை அரியணைமீது ஏற்றிடச் சட்டம் செய்து சதிபுரியும் இந்தி ஏகாதிபத்தியத்தின் தன்மையை, திராவிடத்தின் அங்கமாகத் திகழும் கன்னட மொழியை நசுக்க வடவர் செய்யும் சூதை, கருநாடக மக்கள் புரிந்து கொண்டுவிட்டனர்.

"இந்தி மொழி வேண்டாம் ! எங்கள் தாய்மொழி 'கத்தூரி'யென மணக்கும் கன்னட மொழி வேண்டும் !" என்று இடிபோல் முழக்குகின்றனர் மைசூர் மாநிலத்தோர்.

"இந்தி வெறியர்களின் ஆணவப் போக்கும் திமிர் பிடித்த நடத்தையும், முரட்டுத்தனமான வெறியும், நாடு முழுவதற்கும் தாங்கள்தான் எசமானர்கள் என்றிடும் எதேச்சாதிகார மனப்போக்கும், முரட்டுத்தனமும் முட்டாள்தனமும் நிறைந்த கைதூக்கும் பேர்வழிகளினுல், மக்கள் சபையில் முடத்தனமாக வாக்களித்ததனுல், நாம் இந்தியை நாடு முழுதும் பேசும் மொழியாக ஆக்கலாம் என்று மனப்பால் குடித்தலும் ஆகியவை மற்ற இந்தி பேசாத பகுதியினரின் உணர்ச்சியை உலுக்கி, மனதைப் புண்ணுக்கி, உள்ளத்தில் வெறுப்புண்டாக்கி 'நாட்டின் ஐக்கிய"த்திற்கே பங்கமுண்டாக்கத்தக்க விதத்தில் பலப்பல விபரீத நிகழ்ச்சிகள் நடக்க ஏதுவிருக்கிறது" என்றும்,

"இந்த நிலையில்-மொழித்துறையில் வெறியர்கள் செய்யும் அட்டகாசத்தை அடக்கக்கூடியவர், தென்னுட்டு மக்கள் இந்தி வெறியர்களால் இம்சைபடுத்தப் படுவதை தடுக்கக்கூடியவர் ஒரே ஒருவர்தான். அவர்தான் பிரதமர் நேரு! தென்னுட்டின்மீது இந்தி அதிகாரப் பூர்வமான மொழி என்று திணிக்கப் படுவதை மறுத்துரைக்கும் பிரதமர் நேரு இந்த வகையில் தென்னுட்டுக்கு உதவிபுரியலாம்" என்றும் எழுதுகிறது ஓர் ஏடு.

மேலே காட்டப்பட்டிருக்கும் சொற்றொடர்களைப் எந்தப் பத்திரிகை எழுதியது ?

வேறு எது ? கருநாடகத்தின் ஒரே ஆங்கில நாளிதழான "டெக்கான் எரால்டுதான் இப்படி" மொழி உணர்வு பற்றி முழக்கமிட்டிருக்கிறது.

அண்மையில் வடநாட்டு "யாத்திரை" அல்ல, பயணம் சென்றிருந்தாரே "சுதந்திராக் கட்சியின் தலைவரான ஆச்சாரியார், அப்பொழுது வாரணுசி எனப்படும் காசியில் அவர் ஒரு பொதுக்கூட்டத்தில் பேச முற்பட்ட போது, "இந்தியில் பேசு, ஆங்கிலத்தில் பேசாதே !" என்று குழப்பம் விளைவித்துக் கலகம் செய்தனர், "இந்தி" வெறிபிடித்த காலிகள் பலர். அது போது அவர் பேசமுடியாது கூட்டத்திலிருந்து வெளியேற வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அதைப் பற்றி ஆச்சாரியார் அவர்கள் "ஏறக்குறைய பதினைந்து சிறந்த மொழிகள் இருக்கும் இந்தத் துணைக்கண்டத்தில் இந்திக்குரிய சரியான இடத்தை நிர்ணயிக்க இந்திமொழி பேசுபவர்களும், இந்திப் பிரியர்களும் இந்த வழியைக் கையாள்வது தவறு. இது அப்பட்டத்தனமான ரௌடித்தனமே தவிர வேறு அல்ல. இதனுல் இந்திக்குக் கொடுக்கக்கூடிய கொஞ்ச நஞ்ச இடமும் பாழாகிவிடும்" என்று எச்சரிக்கை விடுத்தார்.

இந்த நிகழ்ச்சியைப் பற்றி எழுதுகையில்தான் "டெக்கான் எரால்டு" இந்தியைப் பற்றி அப்படி எழுதியுள்ளது.

மேலும், "டெக்கான் எரால்டு" இந்தி வெறியர்களுக்கு எச்சரிக்கையையே விடுத்துள்ளது.

"நேருவின் இடையீடு இல்லையேல், இன்னும் பலவிதானமான அருவருக்கத்தக்க நிகழ்ச்சிகளைக் காண நேரிடும். எதிர்காலத்தை நோக்கி நடைபோடும் ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் இது ஊறு விளைக்கும் செயலாகும். எனவே இந்தி வெறியர்களும், இந்தித் தலைவர்களும் ஆச்சாரியாரின் அறிவுரைகட்குச் செவிமடுக்க வேண்டும். **இல்லையேல், சரித்திரத்தை அவர்கள் உணரமுடியாவிட்டால், சுவரில் எழுதப்பட்டிருப்பதைப் படிக்க முடியாவிட்டால், அவர்களின் வெறியால், முட்டாள்தனத்தால், வஞ்சகப் போக்கால் நாடு தனியாகப் பிரிக்கப்பட வேண்டி நேரும் !"** என்று எச்சரிக்கை விடுக்கிறது "டெக்கான் எரால்டு" என்றுல், கன்னடம் இந்தியை வேண்டாமென்கிறது என்பதுதானே அருத்தம் !

ஏப்ரல் பதினைந்தாம் தேதிய 'டெக்கான் எரால்டில்" வாசகர்கள் பக்கம் என்ற பகுதியில் ஒரு கடிதம் வந்துள்ளது. அந்தக் கடிதம் மேலே கூறிய கட்டுரை விமர்சனத்தைப்பற்றி எழுதப்பட்டது. "சிட்டிசன்" என்ற புனைபெயரில் எழுதப்பட்டிருக்கும் அக்கடிதத்தில் இந்தி வெறியர்களின் விபரீதப் போக்கு தெள்ளத்தெளிய எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.

"மக்கள்சபையில் நேரு பண்டிதர் என்ன சொன்னுலும், நடப்பது வேறு விதமாக இருக்கிறது. இந்தி தெரியாத இராணுவப்படையினரின்மீது இந்தி திணிக்கப்படுகிறது, வலுக்கட்டாயமாக. இந்தித் தேர்வுகளில் அவர்கள் தேருவிட்டால் அபராதம் விதிக்கப்படுகிறது. 'சிவிலியன் பள்ளியாசிரியர்கள்' என்ற வேலைக்கு இந்தி தெரியாதவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை. தென்னிந்தியர்கள் வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டவுடன் ஆறு மாதங்களுக்குள் முதல் இந்தித் தேர்வில் தேறிவிட வேண்டும் என்று ஒரு விதி இருந்தாலும், அது அமுலுக்கு கொண்டுவரப்படுவதில்லை. ஏனெனில் போட்டி கொடுக்கும் பலரும் 'விந்தியத்திற்கு கீழே ஒரு நாடுள்ளது, அதில் மனிதர்கள் வசிக்கிருர்கள்' என்பதைக் கூடப் புரிந்துகொள்ளதவர்களாகயிருக்கிருர்கள். "சூனியர் கமிசன்"வரை வரக்கூடிய திறமையுள்ள பெரும்பாலான தென்னிந்தியர்கள், இந்தி தெரியாத காரணத்திஞல் கீழான நிலையில் இன்றும் இருக்கின்றனர். நுணுக்கத்தில் தேர்ந்தவர்களாக அவர்கள் இருந்தும், இந்தித் தேர்வுகளில் தேருததால் மேலே போகமுடியாமல் திறமையைப் பயன்படுத்த முடியாமல் வாடுகின்றனர். இன்னும் என்ன இருக்கிறது ? புத்தகங்களும், விதிமுறை நூல்களும்கூட இந்தியில்தான் வெளியிடப்படுகின்றன. மற்ற துறைகளை விட இந்தியை வெகு வேகமாகப் புகுத்துவது இராணுவத்தில்தான் நடைபெறுகிறது. எனவே, ஆச்சாரியாரைஇந்தியில் பேச வேண்டும் என்று வலுக்கட்டாயப்படுத்தி, அவமானப்படுத்தியதில் ஆச்சரியம் என்ன இருக்கிறது ? நம்மில் யாராவது, நேருவையோ, பந்தையோ, சென்னையிலோ, பெங்களூரிலோ பேசுகையில் 'இந்தியில் பேசாதே ! தமிழிலாவது, கன்னடத்திலாவது பேசு !' என்று வலுக்கட்டாயப்படுத்தி கலகம் விளைக்க முடியுமா ? எனவே, திட்டவட்டமாகவும், தீர்மானமாகவும் எதுவும் செய்யாவிடில் இராணுவத்தில் மட்டுமல்ல; மற்ற எல்லாத் துறையிலும் தென்னிந்தியரின் தொகை குறைவது மட்டுமில்லாது, மறைந்தேவிடும்" என்று முடிக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் கடிதத்தின் வாயிலாகத் தென்னுட்டாரின், குறிப்பாகக் கருநாடகத்தாரின் உள்ளக் கொந்தளிப்புப் புரிகிறதல்லலா ?

இந்தி மொழி வேண்டாம் என்று தமிழகம் மட்டுமல்ல; கருநாடகமும் கூறுகிறது அல்லது எச்சரிக்கிறது. அந்தக் "கேளாக்காதின"ருக்கு விழச் செய்வதுதானே நமது நோக்கம் ! இப்பொழுதாவது, திராவிடத்திற்குத் தேவையில்லாதது மொழி இந்தி என்பதை உணருவார்களா ?

—**இரா. மதனகோபால்**
பி. காம்., டி. ஐ. பி.

— 3-ம் பக்கத் தொடர்ச்சி —

திருவனந்தபுரத்தைச்சுற்றி நெடுந் தொலைவிற்குத் தென்னந்தோப்புகளே நிரம்பியிருப்பதால் தேங்காய் நார் உரித்துக் கயிறு பின்னும் தொழில் முதல் சிறப்பிடம் பெறுகிறது. கடல்நீரைப் பிரித்துப் பெரிய கால்வாயாக மாற்றியிருக்கிருர்கள். படகுகளில்தான் தேங்காய் மட்டைகள்-ஓடுகள் ஆகியவைகளைச் ஏற்றிச் செல்கிருர்கள் ! படகுப் பயணம் கட்டுமரத்தில் பயணம் செய்வதுபோல அல்லாமல் பாதுகாப்புடன் சிறு குடிசையாகவே நகர்கிறது ! திருவனந்தபுரத்தின் மொத்த எழிலையும் ஒரே சமயத்தில் காண வேண்டுமானுல் பொருட்காட்சிக்கு அருகிலேயுள்ள மன்னர்களின் கண்ணுடி மாளிகையில் இருந்து காண வேண்டும் ! மாளிகையுள் செல்ல எல்லோருக்கும் எப்போதும் அனுமதி கிடைப்பதில்லை ! நம்மால் கணக்கிடமுடியாத பெருஞ்செல்வம் கொழிக்கும் இந்த மாளிகையில்தான் மன்னர்கள் விருந்துகள் நடத்துவராம். இதற்கு எதிர்ப்புறத்திலேயுள்ள ஒரு பூங்காவில்தான் இப்போதைய இளவரசரின் தாயான பார்வதிபாய் அவர்களின் வெண்சுண்ணும்புச்சிலை உயரமாக வைக்கப்பட்டுள்ளது. அந்த மகாராணியார் பெண்கள் முன்னேற்றத்திற்காகவும் ஆலய நுழைவு வெற்றி பெறுவதற்காகவும் அரும்பெரும் சமூகநலப் பணிகளைச் செய்து முடித்திருப்பதால், நினைவுச் சின்னம் எழுப்பப்பட்டுள்ளதாக குறிக்கப்பட்டிருந்தது ! திருவிதாங்கூர் திவாகை இருந்த சச்சிவோத்தமர் சர். சி. பி இராமசாமியின் பெயரால் நகரத்தின் தங்கும் விடுதி அழைக்கப் படுகிறது. குறைந்த செலவில் பிரயாணிகளுக்கு நல்ல வசதிகளைக் கொண்டதாயுள்ள இந்த விடுதியை திருவனந்தபுரம் மாநகராட்சி மன்றம் பொறுப்பேற்று நடத்திவருகிறது. ஆகஸ்ட் கலவரத்தின்போது விடுதியின் முன்பாக இருந்த சர். சி. பி. இராமசாமி அவர்களின் உருவச் சிலையை உடைத்துவிட்டார்களாம் ! தேர்தல் காலத்துத் தோரணங்கள் நகரின் முக்கிய தெருக்களில்எல்லாம் அறுக்கப்படாமலும் அவிழ்க்கப்படாமலும் அசைந்தாடிக்கொண்டுள்ளன. இரண்டு நாட்கள் நகரிலே தங்கியும் எந்த அரசியல் கட்சியின் சார்பிலும் பொதுக்கூட்டம் எதுவும் நான் எதிர் பார்த்ததுபோல் நடைபெறவில்லை ! லூயிபிசர் அவர்கள் எழுதிய "மீண்டும் உருசியாவில்" என்ற புத்தகத்தைப் படித்தபோது, எனது திருவனந்தபுரம் சுற்றுப்பயணத்தை எல்லாவகையிலும் ஒவ்வொரு பகுதியாக மிக நுட்பமாகவும் விளக்கமாகவும் எழுத விரும்பினேன். ஆனுல் முடியவில்லை. எனவே எனது இரண்டாவது நாள் இரவு ஒன்பது மணிக்கு மதுரை நோக்கி என் பயணத்தைத் துவக்கினேன். அதே வேளையில் திருவனந்தபுரம் சுற்றுப்பயணம் முடிவுற்றது !

(முற்றிற்று)

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு,

வணக்கம் பல. தங்கள் 19-3-60 திகதியிடப்பட்ட "தென்றல்" இதழ் கண்டேன். அதில் இலங்கையில் நடைபெற இருக்கும் தேர்தலைப் பற்றித் தங்கள் "எண்ண"த்தை வெளியிட்டிருந்தீர்கள். மிக்க மகிழ்ச்சி.

தேர்தலைப்பற்றிய சில செய்திகள் தந்திருக்கிறீர்கள். மேலும் சில செய்திகளைத் தர விழைகின்றேன். 1946-ம் ஆண்டின் இலங்கை அரசப் பேரவைக் கட்டளையின் பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம் 28அ (2)ம் பிரிவிற்கிணங்கப் பட்டியலில் இருக்கும் 1, 2, 3, 4, 5, 6, 7, 9, 10, 11, 13, 14, 15, 16, 17, 18, 19,—எண்களையுடைய கட்சிகளும் இலங்கை திராவிட முன்னேற்றக் கழகமும் அங்கீகரிக்கப்பட்டுப் பதிவு செய்யப்பட்டன. தேர்தல் அதிகாரிகளால் மேற்படி சட்டத்தின் 29 ம் பிரிவின்படி பட்டியலில் இருக்கும் 8, 12, 20 ஆகிய எண்களையுடைய கட்சிகளும், இலங்கை சனநாயக யூனியன், தர்மசமாசக் கட்சி ஆகியவையும் அங்கீகரிக்கப்படவில்லை. பட்டியலில் இருக்கும் 21, 22 ஆகிய எண்களையுடைய கட்சிகள் (தனி மனிதர் கட்சிகள்) அங்கீகரிக்கும்படி விண்ணப்பிக்கவில்லை.

அங்கீகரிக்கப்பட்ட, அங்கீகரிக்கப்படாத, அங்கீகரிக்கும்படி விண்ணப்பிக்காத கட்சிகளின் மொத்த எண்ணிக்கை 25 ஆகும். இவைகளில் 3 கட்சிகள் போக 22 கட்சிகள் 145 தொகுதிகளில் போட்டியிட்டன. 145 தொகுதிகளில் 151 அங்கத்தினர்களைத் தெரிவு செய்வதற்காக 22 கட்சிகளையும் சேர்ந்த 723 பேர்களும் 175 சுயேச்சையாளர்களும் போட்டியிட்டனர். ஆக மொத்தம் 898 பேர்களே போட்டியிட்டனர்.

இலங்கை பூராவுமே தேர்தல் நடைபெற்றது தாங்களோ "தென்னிலங்கையில் தேர்தல் நடக்குதாம்" என்று குறிப்பிட்டுள்ளீர்கள். காரணம் என்ன? இலங்கையின் மற்றும் பகுதிகளைக் குறிப்பிடாதது ஏனோ? அடுத்த தென்றல் மூலம் விடை கூறுவீர்களா?

தங்கள் "தென்றல்" இதழ் தவறாமல் வாராவாரம் படிப்பேன். ஐயம் அகற்று, கூடலரசன் கட்டுரை முதலியவற்றையும் தங்கள் எண்ணத்தையும் விரும்பி ஆவலுடன் படிப்பேன். நானும் என் சில நண்பர்களும் சேர்ந்து இ. த. தி. மு. கழகம் நிறுவிச் சமுதாயப்பணி புரிந்து வருகின்றோம். கழகம் பற்றிய விவரம் மேலும் அறிவிக்கின்றேன். என் வினாக்களுக்கு விடை தருக.

வணக்கம்.

அன்பன்,
கா. அ. மாணிக்கவாசகம்,
திரிகோணமலை.

★

[தென்னிலங்கை என்று நாம் குறித்தது, நண்பர் கருதும் "இலங்கையின் தெற்கு" என்ற பொருளில் அல்ல. தமிழகத்தின் தென்பகுதியில் இலங்கை இருப்பதால் அதைத் "தென்னிலங்கை" என்றும் வழங்குவதுண்டு. அந்தப் பொருளிலேயே நாம் இங்கு இதை எழுதினோம். —ஆ-ர்.]

19-3-60 அன்று நடந்த இலங்கைப் பொதுத்தேர்தல் முடிவுகள்.

வரிசை எண்.	கட்சியின் பெயர்.	சுருக்கப் பெயர்.	நிறுத்திய வேட்பாளர்கள்.	வென்றவர்கள்.
1	ஐக்கிய தேசியக் கட்சி	U. N. P.	127	50
2	ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி	S. L. F. P.	108	46
†3	தமிழ் அரசுக் கட்சி (சமஷ்டிக் கட்சி)	F. P.	19	15
‡4	லங்கா சமசமாசக் கட்சி	L. S. S. P.	101	10
‡5	மக்கள் ஐக்கிய முன்னணி	M. E. P.	89	10
6	லங்கா சனநாயகக் கட்சி	L. P. P.	121	4
‡7	இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி	C. P.	53	3
8	சிங்கள இன முன்னேற்ற முன்னணி	J. V. P.	2	2
9	சோஷலிச மக்கள் முன்னணி	S. M. P.	39	1
†10	அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசு	T. C.	8	1
11	அமர பண்டாரநாயக்கா முன்னணி	B. B. P.	2	1
12	அகில இலங்கை சிங்கள இன முன்னணி	S. L J. P.	1	1
	கீழ்வரும் கட்சிகள் ஒரு இடத்திலும் வெற்றிபெறவில்லை.			
13	சிங்கள இன சங்கம்	S. J. S.		
14	இலங்கை சுதந்திரக் காங்கிரசு	C. I. C.		
15	மலை நாட்டு முன்னணி	U. P.		
16	பௌத்தக் குடியரசுக் கட்சி	B. R. P.		
†17	இலங்கை சனநாயகக் காங்கிரசு	C. D. C.		
18	ஸ்ரீ லங்கா தர்மராசக் கட்சி	S. L. D. P.		
†19	தமிழ் பேசும் முன்னணி	T. S. F.		
	தம் கட்டுப்பணத்தையும் இழந்த தனி மனிதக் கட்சிகள்.			
20	இலங்கை சோசலிசக் கட்சி	C. S. P.		
21	முசுலிம் குடியரசுக் கட்சி	M. R. P.		
†22	ஈழத்தமிழர் ஒற்றுமை முன்னணி—(இருவருக்குக் கட்டுப் பணம் கிடைத்தது.)	E. T. O. M.		
	போட்டியிட்ட மொத்தக் கட்சிகளின் எண்ணிக்கை—22. போட்டியிட்டவர்களின் எண்ணிக்கை, சுயேச்சைகள்—175 உட்பட=898 (723+175).			

† இக்குறியிடப்பட்ட கட்சிகள் முழுக்க முழுக்கத் தமிழ்க் கட்சிகள்.

‡ இக்குறியிடப்பட்ட கட்சிகள் உண்மையான மார்க்சிசக் கட்சிகள். இலங்கா சமசமாசக் கட்சியும் கம்யூனிஸ்ட் கட்சியும் தமிழ்ப்பகுதிகளில் ஏராளமானோரை நிறுத்தின. ஆனால் ஒரு ஆசனம்தானும் கிடைத்திலது.

மலைநாட்டுத் தமிழ்த் தொழி[illegible]ர் இயக்கத்தில், சிங்களத் தொழிலாளர்களும் உளர். ஆசியாவிலேயே கூடிய அங்கத்தினர்களை உடைய தொழிற்சங்கம்.

நன்றி

அண்மையில் திருச்சித் தமிழ் எழுத்தாளர் சங்கத்தில் பன்மொழிப் புலவருக்கு ஒரு வரவேற்பு அளிக்கப்பட்டது. அதுபோது அப்பாத்துரையார் அவர்கள் அளித்த நன்றியுரையின் ஒரு பகுதி இது:

"தமிழின் பழமையை, பெருமையை உலகம் இன்னும் உணரவில்லை. தமிழ் என்ற மொழி இருக்கிறது என்பது வெளிநாடுகளில் உள்ள பலருக்குத் தெரியாது. அவ்வளவு ஏன்? இந்தியாவில் உள்ள சில மாநில மக்களுக்குக் கூடத் தமிழ்பற்றித் தெரியாது! ஏன் இந்த நிலை? நினைத்துப் பார்த்தால் வேறு யார் மீதும் குற்றம் சொல்லத் தோன்றவில்லை; இப்பழிக்குக் காரணம் தமிழரே

தமிழன் தன் மொழியை, தாய் மொழி என்று பாசம் வைத்துப் பேசுகிறானே தவிர உலக மொழிகளில் உயர்ந்தது தமிழ் மொழி என்று நெஞ்சுரத்தோடு நிமிர்ந்து சொல்லும் தன்மை படைக்கவில்லை. பிற மொழிகளுடன் ஒப்பிட்டுக் காட்டி உயர்ந்த மொழி தமிழ் என்று சொன்னால் மற்ற மொழியினர் மனம் புண்படுமோ என்று தயங்குகிறான். தமிழ், தன் தாய் மொழி என்ற பாசத்தை விட்டு உலக மொழிகளில் தொன்மையான மொழி தமிழ் மொழி என்று தமிழன் உறுதியுடன் சொல்லத் துணியும் வரை நல்ல காலம் இல்லை என்று தான் சொல்ல வேண்டும். சமயம் கிடைத்த போதெல்லாம் தமிழின் பெருமையை, தொன்மையைத் தமிழன் முரசு கொட்ட வேண்டும்."

—1-ம் பக்கத் தொடர்ச்சி—

சொன்னதுபோல், "சுடுகாட்டு நரிகள் ஒரு வீட்டில் ஒரு பிணம் விழாதா?" என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கலாம். ஆனால் வீட்டுக்காரர்களில் ஒருவரே அதை எதிர்பார்ப்பது குறும்புத்தனமானது. இப்படிப்பட்ட நிலைமைகளுக்கு முடிவு காணவேண்டும் என்பதைத்தான், சம்பத்தின் கடிதம் குறிப்பிட்டது. பொருளற்ற முறையில் கருத்துக்களை வெளியிட்டு எதிர்க்கட்சிக்காரர்களுக்கு நம்மவர்களே இடம் கொடுப்பதை நாம் சகிக்கமுடியாது. கடிதத்தை எழுதிவிட்டுக் கையெழுத்துப் போட மறந்தவனைப்போல், கருத்துக்களைத் தெரிவித்துவிட்டுப் பெயரை மறைத்துக்கொள்ளும் பழக்கம் நம்மில் யாருக்கும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

தோழரே! கடமைக்காகவே அல்லும் பகலும் உழைக்கின்ற நீங்கள் இத்தகையவர்கள் போக்கினால் எவ்வளவு வேதனையடைந்துள்ளீர்கள் என்பதையும் நான் அறிவேன். இதை என் பங்குக்கு நான் செய்யும் குழப்பம் என்று கருதிவிட வேண்டாம். உங்களுடைய கண்டனம் சிலருக்குக் கிடைத்தாக வேண்டுமென்றே, இதை நான் எழுதுகிறேன். கொஞ்சம் எண்ணிப்பார்த்தால் வேறு வேலையில்லாத நேரத்தில் கட்சிப் பக்கம் தலை காட்டுகிறவர்கள்தான் இப்படிப்பட்ட தவறுகளைச் செய்கிறார்கள் என்பதனை உணரமுடியும். என்னைப் பொறுத்தவரை இரண்டே நிலைகளைத்தான் நான் நேசிக்கிறேன். ஒன்று எந்த விதமான சாதி அபிமானமுமில்லாமல் முழுக்க முழுக்கக் கட்சிக்காரனாயிருக்க வேண்டும். இல்லையேல் ஓய்வில் ஒதுங்கிய தனி மனிதனாகிவிட வேண்டும். பாதிப் பாகம் இங்கே; பாதிப் பாகம் அங்கே என்று அல்லாடுகிற நிலைமை, கட்சியின் எந்தத் தோழருக்கும் இருக்கக்கூடாது. சம்பத்தின் கடிதம் இதையும் வலியுறுத்தியது. கழகத்தின் சரித்திரத்தில் அந்தக் கடிதம் பெற்ற இடத்தை, கடிதத்தில் கண்ட கருத்தும் பெறவேண்டும் என்பதுதான் என் எண்ணம்.

தோழரே! இதைப் பத்திரிகையிலேயே எழுத நேர்ந்ததற்கு வருந்துகிறேன். இன்றைய நிலையில் எனக்கு இதைத் தவிர வேறு வழியில்லை.

அன்புள்ள,

கண்ணதாசன்

— 8-ம் பக்கத் தொடர்ச்சி —

சோமாவின் விழிகளைத் துடைத்து ஆறுதல் சொன்னான்.

"நீ எப்படிப் பிழைத்தாய் சோமா?"

"நான் இறந்ததாக நினைத்து நீங்கள் போட்டுவிட்டுச் சென்றீர்கள். தந்தநாயகேக்கோ மற்றவர்கட்கோ தங்களை அடையாளம் தெரியாது. நம்மிருவரையும் தெரிந்த என் தோழி சசியைத் தந்தநாயகேயுடன், அடையாளம் காட்ட அனுப்பினர். அவள் கரையில் நான் குற்றுயிராய்க் கிடப்பதை எண்ணி அங்கேயே மாரடைத்து இறந்தாள். அவள் பிணத்தை அங்கேயே போட்டுவிட்டு என்னைமட்டும் இட்டுக்கொண்டு வந்தனர் அந்த ஆட்கள்."

"அப்படியா? சசியின்பிணத்தைத் தான் செம்படவர்கள் எரித்திருக்கிறார்கள். நான்தவறாக எண்ணிவிட்டேன், உன் பிணத்தை எரித்துவிட்டதாக...!" என்ற குமரன் "அவளும் இறந்ததன் பின் எப்படி என்னை அடையாளம் கண்டுபிடித்தனர்?" என்றான். "என்னை இங்கே கொண்டு வந்துவிடுகையில், தற்செயலாகத் தங்கள் ஓவியம் ஒன்றைக் கண்டுபிடித்தனர். ஓவியத்தைப் பார்த்ததும், 'இவன்தானா குமரன்? அடிக்கடி பார்த்திருக்கிறேன். பெயர்தான் தெரியாது!' என்றான் தந்தநாயகே. அப்புறம் தனியே தன் தோழர்களை மட்டும் அழைத்துக்கொண்டு புறப்பட்டான். ஏற்கனவே நீங்கள் அவனைப் பல இடங்களில் அவமானப் படுத்தியிருக்கிறீர்களாமே?" என்றாள் சோமா.

"ஆமாம்!" என்று குமரன் சொல்லி முடிப்பதற்குள் திடீரெனப் பலர் உள்ளே நுழையும் ஒலி கேட்டது. குமரனை அணைத்துக்கொண்டாள் சோமா.

உள்ளே நுழைந்த குணதிலகே "என் சொத்தைத் தன சொத்தாக்கிக் கொண்ட கொடியவன் நீதானா? இந்த எச்சிற் கனிக்காகத்தான் அமரசேனே இத்தனை அலைச்சல் அலைய வைத்தானா? என் ஆத்திரத்தைத் தூண்டிவிட்ட நீங்கள் என்றும் தப்பவேமுடியாது!" என்று பாய்ந்தோடி வந்தான். இருந்த வாளையும் உடைத்தெறிந்துவிட்ட குமரன, அடுத்த வாளை எடுக்க ஓடினான். அதற்குள் குணதிலகே முந்திவிட்டான்.

குமரன் குருதி ஒரு சோக காவியத்தை எழுதியது.

அதன் அருகே கிடந்த சோமாவின் சிலைமேனி ஆயிரம் கதைகளைச் சொல்லியது!

★

வானில் பறக்க நினைத்த புறாக்கள் சிறகொடிந்து கிடந்தன.

இனத்தின் எல்லைக்கப்பால் குரலொலித்த குயில்கள் குரல் வளைகள் நெறிபட்டுக் கிடந்தன.

இரண்டு ஓவியங்களையும் தூக்கி எறிந்தனர் நீலக்கடலிலே. அது இன்றும் அந்த சோக காவியத்தை அலை ஓயாது பாடிக்கொண்டிருக்கிறது!

உங்கள் கண்ணில் நீர் இருந்தால் அது கடல்போலப் பெருகட்டும்!

— அலை ஓய்ந்தது —

தென்றல் வாசகர்களுக்குத் தேனான செய்தி!

★

தொடர்கதை யொன்று தொடங்குகிறது!

"விதி ஒரு சுழற்காற்று-அதிலே சிக்கித் தவிக்கும் சிறு துரும்புதான் இந்த மனிதப் பிறவி!"

"மதியுள்ளவர்கள் விதியை மதிப்பதில்லை. ஆற்றலும் அறிவும் முன் யோசனையும் உள்ளவர் பலர், வாழ்விலே தாங்கள் கருதிய பலனை அடைந்து வெற்றி கண்டிருக்கிறார்கள்!"

∴

"காதல் என்பது போதை தரும் ஒருநோய்!"

"துன்பத்தைத் தீர்க்கத் துணைசெய்யும் நன்மருந்து காதல். அதுமட்டுமல்ல, இன்பத்திற்கு இன்பம் சேர்க்கும் இன்னமுதமும் கூட!"

∴

இப்படிப்பட்ட கருத்துப் போராட்டங்கள், தத்துவச் சிந்தனைகள் நிறைந்தது.

மல்லிகைப் பந்தல்

நவரச எழுத்தாளர்

திரு. நாரா. நாச்சியப்பன்

எழுதும் தொடர் கதை.

இது ஒரு சமுதாயச் சித்திரம்!

காவியமாய்த் தீட்ட வேண்டிய கற்பனையோ கருத்து ஓவியமோ என்று கருதும்படியான இந்தத் தொடர் கதை தென்றல் 14-5-60 இதழிலிருந்து தொடங்குகிறது.

அதிகப் பிரதிகள் வேண்டும் விற்பனையாளர்கள் முன் கூட்டியே அறிவிக்க வேண்டுகிறோம். இதழ் தவறாது தொடர் கதை படிக்க விரும்பும் வாசகர்கள் சந்தாதாரர்களாகிவிடுவது நன்று.

ஆசிரியர் : கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர் : இராம. கிருட்டினன், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127 மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு. தொலைபேசி எண் 89510.